சிவமயம்

இந்துசாதனம்

சிரோதி வருஷ (1889) ஆவணிமாதம் 28-ந்உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனேந்தை யிணையடி நீழலே

புத். ருகூ] யாழ்ப்பாணம் — சர்வசித்து ஸு ஐப்பசி மீ உகஉ (1947 நவம்பர் 7 வெள்ளிக்கிழமை) [இல ருகூ

பிரார்த்தனை

திருச்சிற்றம்பலம்

பாங்குடைத் சவத்துப் பகீரதற் கருளிப் படர்சடைக் கரந்தநீர்க் கங்கை
தாங்குத றவிர்த்துத் தராதலத் திழித்த தத்துவ னுறைவிடம் வினவில்
ஆங்கெரி மூன்று மமர்ந்துட னிருந்த வங்கைமா லாகுதி வேட்கும்
ஓங்கிய மறையோர் ஓமமாம் புலியூ ருடையவர் வடதளி யதுவே.

புற்றர வணிந்து நீறுமெய் பூசிப் பூதங்கள் சூழ்தர வூரூர்
பெற்றமொன் றேறிப் பெய்பலிகொள்ளும் பிரானவ னுறைவிடம்வினவில்
கற்றநால் வேத மங்கமோ ராறுங் கருத்தினா லருத்தியாற் றெரியும்
உற்றபல் புகழார் ஓமமாம் புலியூர் உடையவர் வடதளி யதுவே.

திருச்சிற்றம்பலம்

—திருஞானசம்பந்தர்

சமதர்மிகள் முயற்சி

சௌரயக்கா அரசாங்கத்தைக் கவிழ்க்க

இப்போது இலங்கைப் பாராளுமன்றத்திலே சமதர்மிகள் சமசமாஜிகள் முதலாம் இடதுசாரிகள் எதிர்க்கட்சியிலேயே இருந்துவருகிறார்கள். எதிர்க்கட்சியில் மாத்திரம் இருப்பதால் பயனில்லை. அரசாங்கத்தைக் கைப்பற்றி அரசியலை நடத்தினால் தான் கொண்ட நோக்கங்களை நிறைவேற்றி நாட்டுக்கு நன்மை செய்ய முடியும் என்று இலங்கைச் சமதர்மக் கட்சி எண்ணி இப்போது ஐக்கிய தேசியக் கட்சியுடன் சேராத சகலரையும் சேர்த்து ஓர் ஐக்கிய முன்னணி ஏற்படுத்தி சௌரயக்கா அரசாங்கத்தைக் கவிழ்க்க முயற்சிசெய்கிறது.

இதற்கான முயற்சிகளில் சமதர்மக் கட்சி இப்போது தீவிரமாக ஈடுபட்டிருக்கிறது. ஆனால் இடதுசாரிகளுக்குள்ளே பூரணமான ஒற்றுமை நிலவுமா என்பதே கேள்வி. எதிர்க்கட்சிகள் எல்லாவற்றிற்கும் பொதுவான ஓர்தலைவரை நியமிக்கும் சிறிய ஓர் விஷயத்தில் ஒற்றுமை கொள்ள முடியாத இடதுசாரிகள், அரசியலை நடாத்தும் பெரிய பிரச்னையில் ஒற்றுமை கொள்வர் என்பது முயற்கொம்பு என்று விஷயமறிந்தவர்கள் பேசிக்கொள்ளுகிறார்கள்.

600 ரூபா!

அங்கத்தவர்கள் சம்பளம் பெறுகின்றனர்

இலங்கைப் பாராளுமன்றத்து அங்கத்தவர்களின் வேதனம் எப்படியிருக்கவேண்டுமென்பதைப் பாராளுமன்றம் கூடி இன்னும் நிர்ணயிக்கவில்லை. ஆனால் அண்ணன் வரும்வரைக்கும் அமாவாசை பொறுக்க முடியாது ஆகவே, எங்கள் அங்கத்தவர்கள்எப்போது தெரிவு செய்யப்பட்டனரோ அன்றுதொடக்கம் மாதம் 600 ரூபா வீதம் வேதனம் உதவப்பட்டு வருகின்றனர்.

மந்திரிகள் 1500 ரூபாவும், உதவி மந்திரிகள் 1000 ரூபாவும் பெற்று வருகின்றனர்.

முந்திய அரசாங்கசபையில் அங்கத்தவர்கள் பெற்ற வேதனம் தனித்தனி 500 ரூபா மாத்திரமே.

ஆலயமும் பூசை திருவிழாக்களும்

பண்டிதர், சு. இராமசுவாமி

ஆன்மாவானது ஆணவச் சேர்க்கையுடையது; இந்த ஆணவம் அநாதியாகவே ஆன்மாவுடன் சேர்ந்திருப்பது; ஆன்மா தன்னையாவது தலைவனையாவது அறியவொட்டாமற் தடைசெய்வது; இதனால் அதை இருளோடு ஒப்பிட்டுக் கூறுவர் சைவசித்தாந்திகள். இன்னு மொருவகையாகக் கூறின் ஆணவம் புண்ணிலே படர்ந்துள்ள ஊற்றைச் சவ்வுக்கு ஒப்பானது. ஊற்றைச் சவ்வு புண்ணை ஆறவிடாமல் தடுப்பதுடன் அதையுடையானுக்குப் பெரும் வேதனையையும் கொடுத்துக்கொண்டிருக்கும். ஆணவமும் பிறவியை மாற்றவிடாது தடுப்பதுடன் நரகத் துன்பத்தையுங் கொடுக்கும் வழிகளில் ஆன்மாவைச் செலுத்திக்கொண்டிருக்கும். இவ்வித கொடிய நோயாகிய ஆணவ இருளைக் கெடுப்பதற்கு ஆன்மா ஞான ஒளியைப் பெறவேண்டும். ஞான ஒளி ஞானக்கினியினின்றும் பிறப்பது. ஞானக்கினி நமது சிந்தையினுள்ளே மறைந்து கிடக்கின்றது. அதைக் கடவுட் தியானமாகிய தீக்கடை கோலுடன் சேர்த்து பத்தியாகிய கயிற்றினாற் கடைவோமாயின் ஞானக்கினி வெளிததோன்றி ஒளிவிடும். பத்தி செய்வதற்குக் கடவுளின் திருவுருவக் காட்சி பெறுவதற்கே ஆலயங்கள் அமைக்கப்பட்டு அங்கு கடவுளின் திருவுருவங்களும் தாபிக்கப்படுகின்றன. இன்னும் அத் திருவுருவங்களை விசேடவகையாயலங்கரித்து, இராசாவிற்குச் செய்யும் உபசாரத்திலும் மிகச சிறந்த உபசாரங்களும் செய்யப்படுகின்றன. இவ்வித வைபவங்களால் ஆலயந் தொழுவாரின் கண்களும் மனமும் களிப்படைகின்றன. கடவுளின் திருவருட் பிரபாவத்தையும், அளக்கலாகாப் பெருமையையும் எடுத்துக்கூறும் திருவருட் பாக்கள் வேத மந்திரங்கள் முதலியவற்றைக் கேட்கும்போது தரிசனஞ் செய்வோர் தம்வசமிழந்து பரவசமாகின்றனர். அப்போது ஆணவ முனைப்பாலாகும் யான் எனது என்னும் அகங்கார மமகாரங்களின் ஆற்றல் அழிகின்றது. இதனாலேயே ஔவையார்

தொடர்ச்சி 6-ம் பக்கம்

"கஷ்டத்திற் பட்ட கவி"

(வ. செல்லையா, சைவாசிரிய மாணவன்)

கம்பரிடத்திலே சோழனுக்கு நல்ல மதிப்பு. இவர்களிருவரும் அரசன் புலவன் என்ற முறையில்லாமல் நெருங்கிப் பழகிய நண்பர்கள். சில சமயம் சிநேகித மிகுதியால் விளையாட்டாக, ஒருவரையொருவர் தாக்கிச் சம்பாஷணை செய்வது வழக்கம். ஒருநாள் சோழன் கம்பரை நோக்கி அரசர்களாதரிக்காவிட்டால் புலவர்கள் பாடு எப்படியிருக்கும் என்று விகடமாக ஒரு போடு போட்டான்.

கம்பர் "மன்னனும் மாசறக் கற்றோனுஞ் சீர்தூக்கின், மன்னனில் மாசறக் கற்றோனே சிறப்புடையன்" என்ற ஔவையார் பாடலால் சீர்தூக்கிக் காட்டினார், சோழன் ஒத்துக்கொள்ளவில்லை. தான் பிடித்ததையே சாதித்தான். 'நான் ஆதரிக்காவிட்டால் உம்முடைய பாடுதான் எப்படியிருக்கும்" என்று மீண்டும் ஒரு கடாவைக் கடாவினான். இந்த வார்த்தைகள் கம்பருடைய மனதைப் புண்படுத்திவிட்டன. "விளையாட்டு வினையாக" முடிந்தது

கம்பர் அப்பால் எதுவும் பேசவில்லை; சோழன்சமஸ்தானத்தைவிட்டகன்றார். சபையில் இருந்தவர்களெல்லாருக்கும் ஓரே மலைப்பு. நடந்ததென்னவென்று தெரியாதவர்களாய் ஒருவரை யொருவர் நோக்கினர். சோழனுக்கும் என் இப்படிச் சொன்னேன் என்று பெரிய துக்கம். போனகம்பர் சபையைத் திரும்பிப் பார்க்கவில்லை. வெகுதூரம் போய்விட்டார். போகும்போது ஏதோ வார்த்தைகள் சொல்லிகொண்டு போகிறார். அவர் சிந்தனையில் உருவாகியவாரத்தைகள் தானிவை.பாட்டாக மாறி இங்கு நமக்கு-கண்முன்னிலையில் காட்சி கொடுக்கின்றது.

"மன்னவனும் நீயோ வளநாடு
முன்னதோ
உன்னை யறிந்தோ தமிழை
யோதினேன்—எனை
விரைந்தேற் றுக்கொள்ளாத
வேந்துண்டோ வுண்டோ
குரங்கேற் றுக்கொள்ளாத
கொம்பு."

[தமிழ் – இங்கு இராமாயணம் வேந்து–அரசன். கொம்பு-கொப்பு]

இங்ஙனம சொல்லிக்கொண்டு கம்பர் வெகுதூரஞ் சென்றுவிட்டார். பலவாறாகச் சிந்தித்தபடியேதான் செல்கின்றார். சோழனுடைய ராசதானியையுங் கடந்து, சோழவளநாட்டையுங் கடந்து அப்பால் செல்கின்றார். கம்பரை யறியாமலே அவரின் கால்கள் வெகுதூரம் நடந்துவிட்டன. இப்பொழுது மற்றொரு நாட்டில் பிரவேசித்துவிட்டார். அந்நாட்டில் பாழ்பட்ட ஒரு கிராமம். அதை நான் இங்கு கூறவேண்டியதில்லை. கம்பரின் சிந்தனைச் செய்யுளிலேயே அதன் சிறப்பினைப் பார்க்கலாம். சோழனை வெறுத்துவந்த கம்பர் அன்று இரவு அங்கு தங்கவேண்டியிருந்தது. அந்நகர மாந்தரனைவரையும் ஒன்றுசேர்த்து ஒரு பிரசங்கம் நடத்தினார். அவர் நடத்திய பிரசங்கந்தான் அவரால் அண்மையிற் பாடப்பட்ட இராமாயணம். இராமாயணமென்றால் கம்பருக்கொருமாதிரி. ஏன்? புலவன் தான் ரசிப்பதை மற்றவர்களுக்கு எடுத்துக் காட்டாமலிருக்கமாட்டான். ஒருவாறு இராமாயணப் பிரசங்கத்தை நிகழ்த்தி முடித்தார். சனங்களும் இவரின் பிரசங்கத்தை உற்றுக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். விஷயம் புரிந்ததோ? என்னவோ? அவர்களுக்குத்தான் தெரியும். பிரசங்கத்தை முடித்த கம்பர் எப்படிப் பிரசங்கமென்று ஒருவினவினார். அவன் ஒரு ஆள்பாரமென்றார்; இன்னொருவன் ஒரு சந்தேகம்; அதுதான் இராமனுக்குச் சீதை யென்னமுறை யென்பது, என்று ஒரு வினவை விட்டான்.

கம்பர் திகைத்து இது என்ன விபரீதம்; இந்நாட்டைக் கனவிலும் நினைக்கொணாதே; என்று கூறிக்கொண்டே சில வார்த்தைகள்சொன்னார். அவைதானிப்பாட்டு.

"நீரெலா சேற்றுநாற்றம் நில
மெலாங் கல்லும் முள்ளும்
ஊரெலாம் பட்டி தொட்டி
உண்பதோ கம்பம்சோறு
பேரெலாம் மொம்மன் திம்மன்
பெண்களோ நாயும்பேயும்
காருலாங் கொங்கநாட்டைக்
கனவிலும் நினைக்கொணாதே"

[கார்+உலாப்—காருலாம் -முகில்கள உலாவிவரும். நாற்றம்-மணம்.]

இந்தக் கொங்கநாட்டிலே கம்பர் ஒருகண நேரமும் நிற்கவில்லை. அவ்விரவே அங்கிருந்தும் புறப்பட்டுவிட்டார். செல்கிறார், வெகுதூரம் நடந்த பின் பொழுதும் புலர்ந்தது. இப்பொழுதுதான் சோழனைப் பிரிந்து வந்த பலன் தெரிகிறது. ஆனால் திரும்பிச் செல்லவில்லை. கம்பர் கொங்கநாட்டையுங் கடந்துவிட்டார்.

வெகுதூரத்திலே ஒருவேலி. வேலியென்பது ஒருத்தியின்பெயர். இவள் ஒரு சீமாட்டி. வேலி ஒரு மாளிகை கட்டுவித்தாள். அது முற்றுப்பெறவில்லை. ஒருபக்கத்துச் சுவர் வைத்து முடிவில் விழுந்து விடுகிறது. அதன் கீழே யொருபுதம். இந்தச் சுவரை வைத்து வீட்டைப் பூர்த்திபண்ண ஒருநாளும் சம்மதிப்பதில்லை. வேலிக்குப் பெரிய துக்கம். அந்தச் சுவர் வைப்பவர்களுக்கு வேண்டியவை தருவதாக விண்ணப்பஞ் செய்தாள்,

கம்பருக்கோ சாப்பாட்டுக்கு வழியில்லை. பாட்டைக் கேட்கவும் ஆளில்லை. இனிக் கூலிவேலைசெய்வதென்று தீர்மானித்துவிட்டார். அதனாலே தான் வேலியிடம் போனார்.

சுவர் வைப்பதாக ஒப்புக்கொண்டார். கொஞ்சம் நெல்லுங் கேட்டார். சுவர் வைத்து முடிந்தால்வேண்டிய நெல்லுத் தருவதாகச் சொன்னாள் வேலி.

பாவம்! சுவரின் தன்மையைக் கம்பருக் கெப்படித் தெரியும்! சுவரை வைக்கிறார். வருகிறவர்கள் போகிறவர்கள் கம்பரை ஏழனஞ் செய்கிறார்கள் கவியின் சுவர்வைப்ப வைபவத்தை அநேகர் பார்க்கவும் வந்து நிற்கிறார்கள். சுவர்வைப்புப் பூர்த்தியா

தொடர்ச்சி 6-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசேஷ விஞ்ஞாபனம்

வருகிற ஞாயிற்றுக்கிழமை (11-11-47) தீபாவலித் திருநாள் காரணமாக, இந்துசாதனாலயத்திலும் சைவப் பிரகாச யந்திரசாலையிலும் கடமையாற்றுவோர்களுக்கு விடுமுறை யுதவப்படுதலால் இந்துசாதன ஆங்கில தமிழ்ப் பிரசுரங்கள் அத்தினத்தில் வெளிவரா வென்பதை நேயர்கள் அறிவார்களாக.

மனேஜர்

THE SAIVAPRAKSA PRESS

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், சர்வசித்துஸு ஐப்பசி உக ஞாயிற்றுக்கிழமை

சுதந்திர இந்தியா

இந்தியநாடு பூரண சுதந்திரத்தை யடைந்துவிட்டதென இந்தியரும் மகிழ்ந்தார்கள், அயலிலுள்ள இலங்கையரும் களிகூர்ந்தார்கள்; ஏனைய நாடுகளும் சந்தோஷப்பட்டன. சுதந்திரம் பெற்ற தினத்தன்று இந்திய நாட்டிலே நடந்த கொண்டாட்டம், முன்னெக்காலத்து மில்லாததென்ற கருத்துப்பட அந்த நேரத்தில் வெளிவந்த இந்தியப் பத்திரிகைகள் பாராட்டின; இலங்கையின் பத்திரிகைகளும் அப்பாராட்டை அநுவதித்தன; ஆனால், அக் கொண்டாட்டம் நடந்தபின் நடப்பவற்றை அவதானிக்கும்போது "பெற்றாள் ஒருபிள்ளை அப்பிள்ளை பித்தனால் என்செய்வாள்' என்றவிதமாக பாரதமாதா பெற்ற சுதந்திரன் என்னும் பிள்ளை பல ரோகத்தோடு கூடியவனாகக் காணப்படுகிறான் எனக் கூறல் மிகையாகாது;

பாரதநாடு ஏகபோக சுதந்திரம் பெறுதலின்றி இந்திய இராச்சியம் பாக்கிஸ்தான் இராச்சியமென இரண்டாகப் பிரிந்து சுதந்திரம் பெற்றபோதே, அது பூரண ராச்சியமாகமாட்டாதென்னுங் கருத்துப்பட மகாத்மா அப்போதே சொல்லிவிட்டார்; இந்திய சுயராச்சியம் பெறுதற்கு அணிமையான காலந்தொட்டு, சுயராச்சியம் பெற்றபின் இற்றை வரையில் இந்தியாவிலே நடக்கும் படுகொலைகளும் சமயவிரோதமான செயல்களும் மானபங்கமான செயல்களும் இன்னும் பலவகையான அக்கிரமமுங் கொஞ்சமா? ஜின்னாவையும் அந்த ஜின்னாவைச் சேர்ந்த இஸ்லாமியரையுஞ் சாத்வீக முறையினாற் சமாதானப்படுத்தலா மென மகாத்மாகாந்தி நேரு முதலாம் இந்தியத் தலைவர்கள் தங்களால் ஆனமட்டும் முயற்சி செய்து வருகிறார்கள்; ஆனால் இற்றை வரையில் இம்முயற்சியில் இந்தியத்தலைவர்கள் அநுகூலமடைந்திலர்; இச்சாத்வீக முறையினால் இஸ்லாமியர் சமாதானத்தை இந்தியர் பெறுவரோ என்பதும் அசாத்தியம்; ஏன்? " .... அளவளாய்நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர் ...." என்பது பெரியோர் வாக்காதலினாற்றான். மேலும் "ஆலைப் பலாவாக்க லாமோ அச்சுணங்கன்வாலைநிமிர்த்தவசமாமோ" என்றாங்கு சாதிசமயப் பிராந்திகொண்ட இஸ்லாமியஇந்துக்களோடு ஒத்துழைப்ப ரென்பது பகற்கண்ட கனாப்போலாம். இஸ்லாமியர் எந்தக் காலத்தில் எந்த நாட்டில் ஏனைய நாட்டினருடன் சமாதானமாகப் பரிபாலனஞ் செய்து வந்தன ரென்பது ஆராய்ந்தறியவேண்டியது; ஒன்றில் அவர்கள் தாங்கள் மற்றைச் சாதியாரை அடக்கி யாள்வார்கள்; இல்லையேல் வல்லரசினரால் அடக்கியாளப்படுவர்; இந்த இரண்டு முறையுமே உலக சரித்திரத்திற் கண்டது; மொகலாய ராச்சியத்தில் அக்பார் சக்கரவர்த்தி போன்றனரும் இருந்தார்களே யெனில் அப்படிப்பட்ட சிலரினுஞ் சிலர் புறநடையாக வைத்தெண்ணப்படுவர்; அப்படிப்பட்ட இஸ்லாமிய தலைவர்கள் இந்திய காங்கிரசினராய் இன்றும் விளங்குகிறார்கள்.

இந்துக்களுக்கும் இஸ்லாமியருக்குமிடையே வேற்றுமையேற்பட்டுவிட்டதே யென்பதைப் பற்றிப் பேசிக கவலைப்படுவதென்ன; முன்னர் ஒரு குலத்திலேயே பாண்டவரும் துரியோதனாதியரும் தோன்றிப் பின் மாறுபட்டபோது, அவர்களைச் சமாதானமாக்குவதற்குத் தூது சென்றவர் இந்த மகாத்மா காந்தியாலும் தெய்வ மென்று பாராட்டப்படும் கிருஷ்ண பரமாத்மா வல்லவா? சமாதானம் ஏற்பட்டதா? இல்லை, பாரதயுத்தம் நடந்தே தீர்ந்தது; இப்பொழுதும் இந்திய சுயராச்சியத்தின்றுக்கும் பாக்கிஸ்தானிகருக்கு மிடையே யுள்ள வேற்றுமை முடிவுற்ற பின்னரே இந்தியா பூரண சுயராச்சியம் பெற்றதெனலாம்.

ஒருசாதி மக்களை அவர்கள் சாதியிலும் பார்க்க அவர்களனுட்டிக்கும் சமயமே பெலனாக ஒற்றுமைப்படுத்துமென்ற உண்மையை ரோமன் கத்தோலிக்கர் இஸ்லாமியர் என்னும் இந்த இருமார்க்கத்தினரிடத்தும் விசேஷமாக அவதானிக்கலாம்; சமய அபிமான மில்லாதொழிய எம்மதமுஞ் சம்மதமென ஏற்றுக் கொள்ளு மியல்பினர் இந்துக்களென்று சொல்லுதல் பிழையாகாது, இந்திய பிரதம மந்திரியாகிய நேரு என்ன சொல்லுகிறார் "இந்த இந்தியாவை என்னுயிருள்ளவரை இந்து ராச்சியமாகப் பாவிக்கமாட்டேன்" எனத் தெரிவித்துள்ளார்; பாக்கிஸ்தானிலே இஸ்லாமிய புனருத்தாரண "இலாகா" ஒன்றை அந்த அரசினர் ஆக்கியிருக்கின்றனர்; சென்னை காங்கிரஸ் அரசியல்முறை காரணமாக இந்துமதமே ஸ்தாபனங்களுக்கு நேருமென அஞ்சப்படும் ஆபத்தை அடுத்த பிரசுரத்தில் வெளியிடுவோம்.

விவாகம்

எதிர்வீரசிங்கம் — சிவகாமசுந்தரி

நாளது சர்வசித்து ஐப்பசி மாதம் 10ம் நாள் (27-10-47) திங்கட்கிழமை காலை 7 மணிக்கு வட்டுக்கோட்டை வழக்கறிஞரும், சமாதான நீதிபதியும், தமிழறிஞருமாகிய திரு வேலுப்பிள்ளை நாகலிங்கம் அவர்களின் திருமகன் செல்வி சிவகாம சுந்தரிக்கும், மலாய்நாட்டில் உத்தியோகம் தாங்கி இன்று இளைப்பாறி யிருக்கும் திரு. செல்லப்பா சுப்பிரமணியத்தின் திருக்குமாரன் செல்வன் எதிர்வீரசிங்கத்திற்கும் மணமகளில்லத்தில் சுற்றமித்திரர் சமூகத்தில் மங்களகரமாய்நிறைவேறியது

மணவறையில் நல்லோர் பலரும், அறிஞர், உற்றார், உறவினர், சுற்றமித்திரரும் மணமக்கள் நற்பேறுபெற்று வாழ்கவென

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமானப்போக்குவரவு

யாழ்ப்பாணத்தில் 20ந்திகதி ஆரம்பம்

(நாது நிருபர்)

யாழ்ப்பாணம், பலாலி ஆகாச விமான நிலையத்திலிருந்து வருகிற 20-11-47 தொடக்கமாக, பிரயாணிகள் கொழும்பு, திருகோணமலை சென்னை, திருச்சினாப்பள்ளி முதலாம் இடங்களுக்கு ஆகாச விமானமூலம் பிரயாணஞ் செய்ய வசதிகள் ஏற்படுத்தப்படுமென்று அறிகிறேன்.

இப்போது செய்துள்ள ஒழுங்கின்படி தினந்தோறும், பலாலி விமான நிலையத்திலிருந்து விமானங்கள் புறப்படும். கிழமையில் மூன்று நாட்களுக்கு விமானம் இத்தியப் பிரயாணம் செய்யும். அதாவது இங்கிருந்து திருச்சி சென்னை என்னும் நகரங்களுக்குக் விமானமூலமாகப் போக்குவரவு செய்யலாம். இதனைவிட யாழ்ப்பாணம்-கொழும்பு என்னும் இரு இடங்களுக்குமிடையே ஓர் விமானம் போய் வரும். கொழும்புக்குச் செல்லும்விமானம் திருக்கோணமலையைச் சந்தித்துச் செல்லும். கொழும்பிலிருந்து தினந்தோறும் காலை 8மணிக்கு விமானம்புறப்பட்டுகாலை 9-15மணிக்கு யாழ்ப்பாணத்தையடையும். யாழ்ப்பாணத்தைவிட்டு காலை 9-45 க்கு ஓர்விமானம் சென்னைக்குப் புறப்படும். அது காலை 11 மணிக்குச் சென்னையை அடையும் விமானங்ள் மதுரையில் தங்கும் ஏற்பாடுகள் இன்னுஞ் சில தினங்களிற் செய்யப்படும். சென்னைக்குப் போவதற்கான செலவு மிகக்குறைவாக விருக்குமென்றும், யாத்திரீகர்களின் வசதிக்குத் தக்கபடி இருக்குமென்றும் சொல்லப்படுகிறது. இந்த விமானப் போக்குவரத்து இங்குள்ளவர்களுக்குச் சொல்லொணா நன்மைபயக்க வதுவாகும் என்பதைக் கூறத் தேவையில்லை.

இந்தப் பிரயாண ஒழுங்குகளைச் செய்யும் ஸ்தாபனத்திற்காகிய காரியாலயம் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் மருந்து கொடுக்கும் அறைக்கு முன்னால், விக்டோரியா ரோட் 11-ம் இலக்கத்தில் அமைந்துள்ளது. ஷை காரியாலயத்துக்கும் பலாலி விமான நிலையத்துக்கு மிடையே ஓர் பஸ சஞ்சாரஞ் செய்யும். விமானப் போக்குவரத்துச் செய்பவர்கள் விமான நிலையத்துக்கும், அதிலிருந்து யாழ்ப்பாணத்துக்கும் அந்த பஸவில் பிரத்தியேகமான செலவில்லாமல் ஏறிப் பிரயாணம் செய்யலாம் என்றும் அறியக்கிடக்கின்றது.

இந்த விமானப் போக்குவரத்து, இலங்கையரசாங்கத்தின் பொறுப்பிலே நடக்கும். இதுபற்றிய விபரங்களை யறிய விருப்புவோர், இலங்கை விமானப் போக்குவரத்துப் பகுதியின் யாழ்ப்பாண உதவி உத்தியோகத்தரான ஸ்ரீ ஜே. ஆர். சந்தியாப்பிள்ளையிடம் அறிந்து கொள்ளலாகும்.

உலகம் பலவிதக் கதை

(முற்றொடர்—37)

நீதித்தலத்தில் விசாரணை

'மழைகாலஇருட்டானாலும்மந்திகொம்பிழக்கப் பாயாது" மழை பெய்யும்போதே ஒருமரத்திலிருந்து மற்றமரத்தின் கொம்பிற்குப் பாய்தல் கஷ்டமாகும்; ஏனெனிற் பாயும்போது மழை ஈரத்தினால் வழுக்குகலுங் கூடுமல்லவா? கால்என்றாற் காற்று;மழை பெய்யும்போது காற்றும் அடித்தால் அதனாற் கொம்பாசைய இலக்கு வைத்துக்கொண்டு ஒரு மரக் கொம்பரிலிருந்து மற்றை மரக்கொம்பருக்குப் பாய்வது இன்னும் கஷ்டமாக இருக்கும்; இவற்றோடு இருட்டுமாயிருந்தால், மரக்கொம்பிருக்குமிடத்தை அவதானித்து இலக்காகப் பாய்தல் மிக அரிதல்லவா? இப்படியான சங்கடங்களெல்லா மிருந்தாலும் குரங்கு தன் இயற்கை யறிவினாற்போலும் இலக்குத் தவறாமல் ஒரு கொம்பரிலிருந்து மற்றக் கொம்பிற்குப் பாயுமென்பதுதான் தங்காய் இந்தப் பழமொழியின் கருத்தென்று நினைக்கிறேன்; இதுபோல என்ன சங்கடங்கள்தாம் நேர்ந்தாலும், பெண்ணாகப் பிறந்தவள் தன் மானத்தைப் பாதுகாக்கவேண்டு மென்று சொல்லுகிறேன்"எனக் கூறிமுடித்தாள்: "நல்ல கருத்துள்ள பழமொழி அக்கா" என்று சொல்லிவிட்டுப் பின்னரும் தனபாக்கியந் தன்வரலாற்றைச் சொல்லுவாளாயினாள்; "இப்படியாக ஒருநாள் நமது அபிமானத் தகப்பனார் தம்கடமை பார்த்துவிட்டு அந்திக் காலம் வீட்டிற்குமீண்டுவந்தபோது"மகளே அந்தச் சீனன் அகப்பட்டுவிட்டான்: இப்பொழுது விளக்க மறியலில் இருக்கிறான்" என்று எனக்குச் சொன்னார்: "எப்படி அகப்பட்டான் ஐயா" என்று நான் கேட்டபோது, "அந்த இரதத்தின் சொந்தக்காரன் தன்இரதம் பொலிஸ்தானத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருக்கிற தென்பதையறிந்து, அங்கே வந்தபோது, சாரதிசெய்யத் துணிந்த சதியையும் இரதம் பொலிஸ்தானத்திலே தடை செய்யப்பட்டிருத்தற்குக் காரணத்தையும் பொலிஸ் தலைவர் சொல்ல, இரதச் சொந்தக்காரன் பொலிஸ்துணைகொண்டு தானும் தேடிக் கண்டு அவனைப் பிடித்துக் கொண்டுவந்து நீதிஸ்தலத்தில் ஒப்புவித்திருக்கிறான்; நாளைத்தினம் ஒருபோது விசாரணை நடக்கும்: அந்த நேரம் மகளே, நீரும் நியாயத்தலத்திற்கு வாரநேரினும் நேரும்" என்று சொன்னார்; நீதித்தலத்தில் வந்து உண்மையைச் சொல்வதற்குப் பயமென்ன ஐயா, நான் வருகிறேன் என்று சொல்லி, அடுத்தநாள் குறித்த நேரத்தில், பொலிஸ் கொண்டு வந்த ஒரு இரதத்தில் ஐயாவுடன் கூடிக்கொண்டு நீதிஸ்தலத்திற்குப் போனேன்; விசாரணை நடக்கும் போது நீதித்தலத்தில் என்னையுஞ் சாட்சியங் கேட்டார்கள்; நான் நடந்தவைகளையெல்லாம் ஒன்றுந் தவறவிடாமல் உள்ளபடி சொன்னேன்; பொலிஸ் ஐயாவையுங் கேட்டார்கள், அவரும் உள்ளதைச் சொன்னாராம்; இதற்கிடையில் அந்தச் சீனன் தன்மீது பரிக்கப்பட்ட இரு குற்றங்களையும் தான் செய்ததென ஒப்புக்கொண்டான் .... " என்று சொல்லும்போது, பாக்கியலட்சுமி தன பாக்கியத்தைப் பார்த்து "இரண்டு குற்றங்கள் என்ன, என்ன" என்று வினவ, தனலட்சுமி ஒன்று என்னை மானபங்கஞ் செய்ய முயன்றமையாம், மற்றையது பொலிசின் கட்டளையை மீறித் தப்பி யோடியது" என்று பதில் சொல்லிப் பின்னருங் கூறுகின்றாள்:

"பெண்ணெனிருப் பேயுமிரங்கும்"

எதிரிக்கு நியாயவாதியில்லை, வழக்காளி பக்கமாகப் பொலிஸ் தலைமையதிகாரியே வழக்கை நடத்தினார்; நீதிபதி எதிரியைப் பார்த்து "நீ செய்த குற்றங்களெனிலோ பெருங் குற்றங்களாகும்; இரதச் சாரதியாகவுள்ள நீ உன் பொறுப்பை முந்தியே அறிந்திருக்கவேண்டியது; சாரதி

தொடர்ச்சி 5ம் பக்கம்

காசரோக ஆஸ்பத்திரி

மந்திரி முன்னர் சாட்சியங்கள்

சீகாதார மந்திரி மிஸ்ரர் பண்டாரநாயக்கா யாழ்ப்பாணக் கருமத்தை முடித்துக்கொண்டு கொழும்புக்கு மீண்டுவிட்டார். அவர் சென்ற ஞாயிற்றுக்கிழமை காங்கேசன்துறை வாடிவீட்டில், காங்கேசன்துறை சிவில் ஆஸ்பத்திரியைக் காசரோக ஆஸ்பத்திரியாக மாற்றுதற்குச் சாதக பாதகமான அபிப்பிராயங்களைக் கேட்டார்.

யாழ்ப்பாணம் சைவ பரிபாலனசபையின் சார்பாக அதன் தலைவர் ஸ்ரீ இ. சிவகுருநாதர் அவர்கள் முதலாவது அபிப்பிராயமளித்தார் இப்போதுள்ள சிவில் ஆஸ்பத்திரி புனிதமான இடத்தில் உள்ளது; கீரிமலை, மாவிட்டபுரம் காங்கேசன்துறை என்னும் மூன்று புனித ஸ்தலங்களுக்குமிடையேயுள்ள இப்போதைய ஆஸ்பத்திரியைக் காசரோகிகளுக்கு அநுமதித்தால், இப் புனித ஸ்தலங்களைத் தரிசிக்க வருவோரை வரவேண்டாமென்று கூறித் தடுப்பதாக முடியும். அதுவுமன்றி காசரோகம் ஓர் தொற்றுநோய்; கீரிமலைப் புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நானம் செய்ய வரும் ஆயிரக் கணக்கான அன்பர்களும், மாவிட்டபுரம் உற்சவ காலத்தில் வரும் சைவ மக்களும் மிகவும் பாதிக்கப்படுவர் என்று ஸ்ரீ சிவகுருநாதர் எடுத்துரைத்தார்.

தென்மராட்சி மகாஜனசபைத் தலைவர் ஸ்ரீ வீ. எஸ். கார்த்திகேசுவும், ஸ்ரீ சிவகுருநாதரின் அபிப்பிராயத்தைத்தழுவி அபிப்பிராயம் தெரிவித்தார்.

திருநெல்வேலிச் சைவாசிரிய கலாசாலைத் தலைமையாசிரியர் ஸ்ரீ எஸ். சுவாமிநாதன் மற்றக்கட்சி நியாயங்களை எடுத்துரைத்தார். தானும் ஓர் சைவசமயிதான் என்றும், சமயத்தைக் காட்டி இந்த நல்ல விஷயத்துக்கு முட்டுக்கட்டை போடுதல் முறையல்லவென்று அவர் கூறினார், இலங்கையின் எல்லாப் பாகங்களிலும் பார்க்க யாழ்ப்பாணத்தில்தான் காசரோகம் அதிகமாகப் பரவி வருகிறது. அதனைத் தடுத்தல் இன்றியமையாதது; அதற்குக் காங்கேசன்துறையில் உள்ள சிவில் ஆஸ்பத்திரியைப்போன்ற சிறந்தசாதனம் பிறிதொன்றில்லை; அந்த ஆஸ்பத்திரியில் காசரோகியாளரை அப்புறப்படுத்திச் சிகிச்சை செய்ய வேண்டும் என்று திரு. சுவாமிநாதன் கூறினார்.

சம்பத்திரிசியார் எல்லூரிப்பிரதமாசிரியரும்கதோலிக்கவேதபாதுகாவலன் ஆங்கில பத்திராதிபருமான அதிவண லோங். சுவாமியார், ஸ்ரீ எஸ். நாகலிங்கம், வண. B. W. யேசுதாஸன் சுவாமியார், நியாயதுரந்தரர் எஸ் நடராசா என்பவர்களும் காங்கேசன்துறை ஆஸ்பத்திரியைக் காசரோக ஆஸ்பத்திரியாக்குவதை ஆதரித்துப் பேசினர்.

ஸ்ரீ வீ. முத்துக்குமாரு எம் ஏ, நியாயதுரந்தரர் எஸ் இளையதம்பி என்பவர்கள் அதற்கு மாறான அபிப்பிராயம் அளித்தனர்.

காங்கேசன்துறைப் பகுதிக்குப் பாராளுமன்றத்துப் பிரதிநிதியான மிஸ்ரர் எஸ் ஜே வி. செல்வநாயகமும் பிரசன்னமாயிருந்தார்.

தமக்களிக்கப்பட்ட சாட்சியங்களையெல்லாம் கேட்ட மிஸ்ரர் பண்டாரநாயக்கா, அபிப்பிராயம் அளித்தவர்களுக்கு நன்றி கூறி, தாம் இவ்விஷயத்தில் கூடிய சீக்கிரம் ஓர் முடிவு தெரிவிப்பதாகவும், ஸ்ரீ செல்வநாயகத்தின் உதவியுடன் இதில் ஓர் முடிவு காண்பது கஷடமல்லவென்றும் தெரிவித்தார். மேலும் அவர் கூறியதாவது:

"ஸ்ரீ செல்வநாயகம், ஸ்ரீ ஜீ. ஜீ பொன்னம்பலம் என்னும்இருவரும் என்னுடைய நீண்டகால நண்பர்கள். ஸ்ரீ செல்வநாயகமும் நானும் ஒரே கலாசாலையிற் படித்தவர்கள்கூட. அப்படிப்பட்ட இரு நண்பர்களது உதவியுடன் இந்தப்பிரச்சினையைச் சுலபமாகத் தீர்த்துவிடுவேன் என்று நம்புகிறேன்"

மிஸ்ரர் பண்டாரநாயக்காவுக்கு நன்றி தெரிவித்து மிஸ்ரர் செல்வநாயகம் பின்வருமாறு தெரிவித்தார்:

'இந்தப் பிரச்சினை மிகவும் முக்கியமானது. ரான் இத்தொகுதிப்பிரதிநிதி என்ற தன்மையில், பொதுஜனங்களின் அபிப்பிராயத்தை அறியமுந்தி ஓர் முடிவும் செய்யவொண்ணாது என்று மந்திரி அவர்களுக்கும் அரசாங்கத்துக்கும் வற்புறுத்தினேன். அதன் பயனாக மந்திரியவர்கள் இங்குச் சமுகமளித்து நிலைமையை நேரே அவதானித்து பொதுமக்களின் அபிப்பிராயத்தையும் அறிந்திருக்கிறார். அவர் நீதிப்படி செய்வார் என்று நாம் காத்திருக்கலாகும்.

"எங்களுக்கும் மிஸ்ரர் பண்டாரநாயக்காவுக்குமிடையே அரசியற் பிரச்சினைகள் பற்றி அபிப்பிராயபேதங்கள் உண்டு என்பது உண்மை. ஆனால் இந்த அபிப்பிராய பேதங்கள் பொதுசன நன்மை சம்பந்தமான விஷயங்களில் குறுக்கே நிற்கமாட்டாது; நாம் தோளோடு தோள்சேர்ந்து ஒத்துழைப்போம்."

திரு. அ மகாதேவா

முன்னர் உள்நாட்டு மந்திரியாகவிருந்த திரு. அ. மகாதேவா, ஹவனா நாட்டில் இம்மாதம் நிகழவிருக்கும் உலக வர்த்தக மகாநாட்டில் மிஸ்ரர் கொறியாவுக்குப் பதிலான இலங்கைப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுவிட்டார்.

பலத்த எதிர்ப்பு

சென்னையக்காவின் முயற்சி "ஓர் துரோகம்"

பாராளுமன்றத்தில் உள்ள நாலு மந்திரிகளின் ஸ்தானங்களைப் பாதுகாக்க, மந்திரசபையினர் குடியேற்றநாட்டு மந்திரிக்கு அவசரத்தந்தி யனுப்பியிருப்பது எதிர்க்கட்சியினருக்குப் பலத்த ஆத்திரத்தைக் கொடுத்திருக்கிறது. பாராளுமன்றம் இப்போது கருமம் ஆற்றவும் அதனை உசாவாது, குடியேற்றநாட்டு மந்திரிக்கு சென்னையக்காக்கோஷ்டி மநுச்செய்து தம்பதவிகளைப் பாதுகாக்க நினைப்பது ஓர் பெருந் துரோகச்செயல் என்று இவர்கள் கருதுகின்றனர்.

இவ்விஷயமாக டக்ரர் என் எம் பெரீரா (சமசமாஜக்கட்சித்தலைவர்) ஓர்பத்திரிகைநிருபர்க்குப்பின்வருமாறுகூறினார்.

"இந்தப் பிரச்சினையை, என்னுடைய கட்சி நிருவாகசபை, கூடிய சீக்கிரத்தில் முடிவுசெய்யும். அப்படி முடிவுசெய்தபின் அந்தவிஷயம் பாராளுமன்றத்திற் கிளப்பப்படும். மிஸ்ரர் சென்னையக்காவும்ஏனைய மூன்று மந்திரிகளும் தம் பதவியைப் பாதுகாத்தற்குக் குடியேற்றநாட்டு மந்திரிக்கு மநுச்செய்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் நடத்தையைக் கண்டித்துக் குடியேற்றநாட்டு மந்திரிக்கு நாம் அறிவித்துப் பயன் இல்லை? ஏன்? அதனால் எவ்வித பயனும் கிடைக்கமாட்டாது."

போல்ஷெவிக் லெனின்கட்சித்தலைவர் டக்ரர் கொல்வின் ஆர். டீ சில்வா பின்வருமாறு அபிப்பிராயம் கூறினார்:-

சென்னையக்காக்கோஷ்டி அதிகாரத்தில் இருப்பதற்காக, குடியேற்றநாட்டு மந்திரி தம்மாலான உதவிகள் அனைத்தையும் செய்துவருவார். ஆனால் டக்ரர் எஸ். ஏ. விக்கிரமசிங்ஹ, பிலிப் குணவர்த்தனா போன்றவர்கள் விஷயத்தில் என்றால், இந்தப் பாரந்த நோக்கம் அந்தக் குடியேற்றநாட்டு மந்திரிக்கு வரமாட்டாது. இத்தகைய ஓர் பட்சபாதகம் கொண்டுள்ள ஓர் அரசாங்கத்துடன் எதிர்க்கட்சியினராகிய நாம் எப்படி ஒத்துழைக்க முடியும்."

மத்துகமப் பிரதிநிதியும், லங்கா ஸ்வாதீனக்கட்சிப் பிரமுகருமான மிஸ்ரர் வில் மற் பெரீரா பின்வருமாறு கூறினார்.

"இங்கே பாராளுமன்றம் என்ற ஓர் ஸ்தாபனம் இருப்பவும் அதனைப் புறக்கணித்துக் குடியேற்றநாட்டு மந்திரியின் உதவியை நாடும் கருமத்தை நாம் எல்லாரும் எதிர்க்கவே வேண்டும். குறித்த பிரமாணத்தை மாற்றவேண்டுமென்று அரசாங்கம் விரும்பினால், பாராளுமன்றம் மூலமாகச் செய்யலாமே."

இலங்கை இந்தியக் காங்கிரஸ காரியதரிசியும், மஸகேலியாப் பிரதிநிதியுமான ஸ்ரீஜுத் ஜீ. ஆர். மோத்தா பின்வருமாறு தெரிவித்தார்:

"இவ்விஷயத்தில் இந்தியக் காங்கிரஸ் பிரதிநிதிகள் எதிர்க்கட்சியினருடன் சேர்ந்து அரசாங்கத்தின் நடைவடிக்கையை நிச்சயமாகக் கண்டிப்பார்கள். தனக்கொரு நியாயம் பிறர்க்கொரு நியாயம் வழங்கும் அரசாங்கத்தால் ஆம்பயன் யாதுமில்லை."

தமிழ்க்காங்கிரஸ் பிரதிநிதியாக செனேற்சபையில் அங்கத்துவம் வகிப்பவரும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸகாரிய தரிசியுமான டக்ரர் ஈ. எம். வி. நாகநாதன் கூறிய அபிப்பிராயம் வருமாறு:

"சென்னையக்கா அரசாங்கம் செய்து வருவது ஜனநாயகத்துக்கு முற்றிலும் முரணானது. எங்கள்கட்சியின் நிலை என்ன என்பதை நாங்கள் பட்டவர்த்தனமாகத் தெரிவித்துவிட்டோம். இப்போது இலங்கையில் அதிகாரமடைந்துள்ள சென்னையக்காக் கோஷ்டி செய்துவரும் சர்வாதிகாரச் செயல்களையெல்லாம் அம்பலத்துக் கிழுத்து அவர்களை அரசியல் வாழ்க்கையிலிருந்து அகற்ற நாம் எம்மால் இயன்ற முயற்சிகளைச் செய்வோம்."

இங்கிலாந்தின் தங்கம்

தங்கத்தைக் கொடுத்தே பொருள்களை வாங்கவேண்டுமென்று அமெரிக்கா வற்புறுத்தியதின் பயனாக, இங்கிலாந்து தன்னிடமிருந்த 60 கோடி பெறுமதியான தங்க இருப்பில் இருந்து 5 கோடியே 50 லட்சம் பவுண் பெறுமதியான தங்கத்தை விடுதலையாக்கியுள்ளது.

புதிய நீதிபதி

கொழும்பு டிஸ்திறிக் நீதிபதி மிஸ்ரர் வி. எல், செயின்ற் கிளெயர் ஸ்வான், உயர்தர நீதிமன்றத்து அதிபதிகளில் ஒருவராக நியமிக்கப்பட்டிருக்கிறார் என்று ஓர் செய்தி கூறுகிறது.

திரு. T P. மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்களுக்கு

ஓர் பகிரங்கக் கடிதம்

இந்துசாதனப்பத்திராதிபர் அவர்களுக்கு,

ஐயா,

கீழே காட்டப்பட்ட பகிரங்கக் கடிதத்தைப் பிரசுரிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன். இங்ஙனம்,

வண்ணை, K. V. A. நாதன்.

5—11—47.

குறித்த கடிதம்

திரு, T. P. மீனாட்சிசுந்தரம்பிள்ளை M. A. அவர்களுக்கு,

ஐயா!

சென்ற இரு வண்ணை வைத்தியேஸ்வர வித்தியாலய மண்டபத்தில் "தமிழ் மொழியாக்கம்" என்னும் பொருள்பற்றிப் பிரசங்கஞ் செய்தீர்கள். அப்போது தமிழ்மொழி விருத்தியாவதற்குரிய வழிவகைகளைக் கூறினீர்கள். அயல்மொழிக் கலப்பு தமிழில் இடம்பெறுவது வரவேற்கத்தக்கது என்றீர்கள். தென்னிந்தியாவில் தனித்தமிழ்க்கட்சி தோன்றிய காரணத்தையுங் கூறினீர்கள். அதாவது, தமிழ்மகன் தன்கருத்தை வெளியிடுவதற்கேற்ற இயல்பான தமிழ்ச்சொற்களிருக்கவும் அவற்றை வழங்காமல் பிறமொழிச் சொற்களைப் பெரிதும் வழங்கத் தலைப்பட்டமையே காரணம் என்றீர்கள். தமிழை வளர்க்க விரும்பினால் இயல்பாகவுள்ள தமிழ்ச் சொற்களை வழக்கழிந்து போகவிடாது காத்து வழங்கிவருவதுடன் வேண்டிய விடத்துப் பிறமொழிச் சொற்களையும் வரவேற்கவேண்டும் என்றீர்கள். தமிழினிடத்து அபிமானம் இருக்கவேண்டுமே யன்றித் "தனித்தமிழ்" என்ற வெறியிருத்தலாகாது என்றீர்கள். இன்னும், பார்ப்பனர் எல்லாம் ஆரியர் என்ற கொள்கை தவறு என்றும் ஒருசிலர் ஒருகாலத்தில் வடநாட்டிலிருந்து தென்னாட்டிற்கு வந்திருக்கலாம் என்றும், அவ்வாறு வந்தவர்களும் தமிழ்நாட்டு மங்கையரை மணந்து விருத்தியாலமையின் தமிழர்களாய் விட்டனர் என்றும், தென்னாட்டுப் பார்ப்பனர் யாவரும் தமிழ்மக்களே என்றும், பார்ப்பனருக்கும் பார்ப்பனரல்லாத தமிழ் மக்களுக்குஞ் சிறிதும் பேதமில்லை யென்றும் வடமொழி தமிழ் மக்களுக்குரிய மொழியே யென்றும், பார்ப்பனரிடத்துச் சிலர் கொண்ட துவேஷம்காரணமாக வடமொழியை வெறுத்து ஒதுக்குதல் அறிவின்பாற்பட்ட செயலாகாது என்றும் பலபட விரித்து இயம்பினீர்கள். இவை ஏற்கத்தகுந்தனவே

அப்பால், "தமிழ்மொழியாக்கம் பெறுவதற்குச் சாதிவேற்றுமை யறவே ஒழிய வேண்டும்" என்றீர்கள். இந்த இடத்திலே சிறிது சிந்தித்துப் பேசியிருத்தல் வேண்டும். தங்கள் கூற்றை உறுதிப்படுத்துவதற்கு "பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்" [illegible] தேடிக் [illegible] அறிஞர். பெருந்தகையார், தீர்க்கதரிசியாதலினாலே, பிற்காலத்தில் தங்களைப் போன்றவர்கள் உலகில் தோன்றிப் பாமர மக்களை ஏமாற்றத் தலைப்படக்கூடும் என அயிர்த்துப்போலும் "பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்" என்ற அளவில் நிறுத்திவிடாமல் "சிறப்பொவ்வா செய்தொழின் வேற்றுமையான்" என ஆணித்தரமாக அறுதியிட்டுரைத்தார் என அறிக. தங்களைப்போன்ற பேரறிஞர் ஒரு குறள் வெண்பாவின் பிற்பகுதியை யறியாது முற்பகுதியை மாத்திரம் கூறிவிடுவர் என்பது நம்புந்தரத்தன்று. திருக்குறளில் "பெருமை" என்ற 98ம் அதிகாரத்தில் அமைந்த இரண்டாம் குறள் வெண்பாவும் அதற்குப் பரிமேலழகர் கண்ட உரையும் வருமாறு:—

பிறப்பொக்கு மெல்லாவுயிர்க்குஞ்
சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமையான்.

இ—ள்: எல்லாவுயிர்க்கும் பிறப்பு ஒக்கும்-எல்லாமக்களுயிர்க்கும் பொதுவாகிய பிறப்பியல்பு ஒக்குமே யெனினும், சிறப்பு ஒவ்வா செய்தொழில் வேற்றுமையான்-பெருமை சிறுமை யெனப்பட்ட சிறப்பியல்புகளொவ்வா, அவை செய்யுந் தொழில்களது வேறுபாட்டால் எ—று.

வேறுபாடு நல்லனவும், தீயனவும், இரண்டுமாயினவும், இரண்டுமல்லவாயினவுமாய அளவிறந்த பாகுபாடுகள். வினை வயத்தாற் பஞ்சபூத பரிணாமமாகிய யாக்கையைப் பொருந்தி நின்று அதன் பயனனுபவித்தல் எல்லாவருணத்தார்க்கு மொத்தலிற் பிறப்பொக்கு மென்றும், பெருமை சிறுமைகட்குக் கட்டளைக்கல்லாகிய தொழிற்பாகுபாடுகள் வருணந்தோறும் யாககைதோறும் வேறுபடுதலிற் சிறப்பொவ்வாவென்றுங் கூறினார்.

இன்னும், "தெரிந்து தெளிதல்" என்னும் 51-ம் அதிகாரத்திலே

'பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்குந்
தத்தங்
கருமமே கட்டளைக்கல்"

எனக் கூறியிருக்கிறார். அதன் பொருளாவது:- பிறப்புக்குணம் அறிவு என்பவற்றால் மக்களெய்தும் பெருமைக்கும் மற்றைச் சிறுமைக்கும் உரைகல்லாவது தாந்தாஞ் செய்யுங் கருமமே பிறிதில்லை என்பதாம்.

இவ்வாறு செயல் வேறுபாடுகளால் சாதி வேறுபாடு உலகமுள்ளவரையும் இருக்கும் என்ற உண்மைக்கு முற்றும் முரணாதலின் என்க.

இதுமட்டுமா? ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலப் பெருந்தகையார் தோன்றிச் சைவத்தை நிலைநாட்ட அரும்பாடுபட்ட இந்த யாழ்ப்பாணத் தமிழ்நாட்டிலே, பொலிவேடந்தரியாது உண்மையான பக்திநெறி [illegible] மக்களாலாவது சைவம் [illegible] ஏற்றுப்பட்டு வரும் இந்த நாட்டிலே புராணங்களைக் குப்பையென்று சொல்ல உங்கள் நா எவ்வாறு துணிந்தது? உங்கள் கூற்று முன்பின் முரணாகிறதே. ஞானப்பால் உண்ட சம்பந்தப் பிள்ளையாரைப் போற்றுகிறீர்கள். வாகீசப்பெருந்தகையாரை வணங்குகிறீர்கள். சுந்தரமூர்த்திசுவாமிகளைத் துதிக்கிறீர்கள். அதேசமயத்தில் புராணங்களைக் குப்பையெனக் கூறி ஒதுக்க எவ்வாறு துணிந்தீர்களோ? அறியேன், புராணங்கள் என்றால் சிவபுராணங்களும் அவற்றுள் அடங்கும் அன்றோ! ஆகவே, புராணநிந்தை சிவநிந்தையாகாதா? புராணங்களை வெறுத்து ஒதுக்குந் தங்களுக்கு அடியார் வழிபாடு ஆகப்பட்டது விந்தையே.

இங்ஙனம்,

தங்கள் பேச்சைக்கேட்டு வருந்திய

வண்ணை. தமிழ்மகன்

5—11—47. K. V. A. நாதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வச் சைவர்கள்

தமிழ்நாட்டிலேயுள்ள சைவர்களைச் சாதாரண சைவர்களென்றுசொன்னால்ஐரோப்பாவில் தோன்றியிருக்கிற புதிய சைவர்களைத் தெய்வச் சைவர்களென்று சொல்ல வேண்டும். நமது சைவர்கள் காய்கறி, பழங்கள் தானியங்களுடன் பாலும் மோரும் நெய்யும் சாப்பிடுகிறார்கள். பசுவிலிருந்து கிடைக்கும் பாலும் மோரும் நெய்யும் புலால்தானேயென்று சிலர் சொல்லுகிறார்கள். இந்தப் பழிச்சொல்லுக்குக்கூட இடமில்லாத தெய்வச் சைவர்கள் ஐரோப்பாவில் தோன்றியிருக்கிறார்கள். அவர்கள் எவ்வகைப் புலாலையும் உண்பதில்லை யென்பதுமட்டுமல்ல, நமது சைவர்கள் பழைமையான காலந்தொட்டு 'விலக்காக'க் கொண்டுவரும் பாலைக்கூட அவர்கள் அருந்துவதில்லை. உப்பையும் மதுவையும் புகையிலையையும் தொடுவதில்லை.

தெய்வ ராஜ்ய சங்கத்தார் என்ற இந்தத் திருக்கூட்டத்தார் 1900ம் ஆண்டில் ஸ்விட்சர்லாந்து நாட்டில் தோன்றினார்கள். அவர்கள் புலாலையும் உப்பையுங்கூடத் தொடுவதில்லை. இந்தக் கூட்டத்தார் ஸ்யிவிட்சர்லாந்திலும், பிரான்ஸிலும் போர்ச்சுகல்லிலும் பெல்ஜியத்திலும் இருக்கிறார்களாம். எல்லோர்க்கும் அன்பாயிரு என்பது அவர்கள் கொள்கை.

இந்தச் சைவர்கள் மகாநாடு ஒன்று சமீபத்தில் பாரிஸநகரில் நடந்தது. நாற்பத்தெட்டு வயதுசென்ற பெர்நார்டு ஸாவர்ஸ் என்பவர் அவர்கள் தலைவராம். உலகத்திற்கு முடிவுகாலம் நெருங்கிவிட்டது. இதுதான் நமது கடைசி மகாநாடாயிருக்கலாம். புதிய யுத்தம் ஒன்று தோன்றி பூலோகத்து மக்களில் பெரும்பாலாரை அழித்துவிடும். நமது விதிகளின்படி நடந்தால் நாம் உயிர் பிழைத்து வாழலாம் என்று அவர் பேசினாராம்.

அன்பர்களான ஐயாயிரம்பேர்கள்கூடிய இந்தக் காட்சி அற்புதக் காட்சியாக இருக்கிறதென்று அமெரிக்கநிருபர் ஒருவர்தமது பத்திரிகைக்கு எழுதியிருக்கின்றார்,

வெடிகுண்டைப்பற்றியும் அணுக்குண்டைப்பற்றியும் கொள்ளை கொலைகளைப்பற்றியுமே கேள்விப்பட்டுவரும் உலகத்தாருக்கு இந்தத் தெய்வச் சைவர்களைப்பற்றிய செய்தி மகிழ்ச்சி தரும் செய்தியாயிருக்கிறது. —லோகோபகாரி.

யாழ்ப்பாணம் பெரியகோட்டு காணிவிற்பனவு விளம்பரம்

சிறுபிள்ளைப் பாராபரிப்புத் தத்துவ இல 333

இளையதம்பி சுப்பிரமணியம் மகள் இரத்தினம்மாள்—சிறுபிள்ளை இளையதம்பி சுப்பிரமணியம் வண்ணார்பண்ணை கிழக்கு

—பராபரிப்புத் தத்துவகாரனும் மேற்பார்வைக்காரனும்

மேற்படி கோட்டு உத்தரவின்படி சிறுபிள்ளைக்குரிய கீழ்க்கண்டகாணி விற்பனை நடைபெறவிருப்பதால் வாங்க விரும்புவோர் பெரியகோட்டுச் சக்கிடுத்தார் யாழ்ப்பாணம் அல்லது V. சிவசுப்பிரமணியம் பிறக்ரர் நொத்தாரிஸ் வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு தங்கள் விண்ணப்பங்களை பரப்பு அல்லது முழுவதும் என்னவிலைக்கு வாங்கத்தயார் என்பதைக் குறிப்பிட்டு இத்திகதியிலிருந்து 21 நாட்களுக்குள் வழக்கு இலக்கங்காட்டி எழுதலாம்.

காணிவிவரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணம் டிவிஷன் வண்ணார்பண்ணை கோயிற்பற்று வண்ணார்பண்ணை கிழக்கிறை "மாணிக்கன்காடு" என்னுங் காணி 4 பரப்பு $2\frac{1}{2}$ குளியில் வடக்குப் பக்கமாக 2 பரப்பும் $1\frac{1}{2}$ குளியும் வீடும் கிணறும் மற்றுமதைச் சேர்ந்தவைகளும்; சொல்லப்பட்ட 2 பரப்பு $1\frac{1}{2}$ குளிக்கும் எல்லைகிழக்கு ஒழுங்கை வடக்கு கந்தன் கதிரவேலுவின் காணி மேற்கு தம்பையா கந்தையாவின் காணி தெற்கு கையொழுங்கை.

V. சிவசுப்பிரமணியம்
தத்துவகாரனின் பிறக்ரர்
நாவலர் கோட்டம்
வண்ணார்பண்ணை 6—11—47.
M 174 —7

இலங்கைவங்கி

(1938-ம் ஆண்டு 53-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி சட்டபூர்வமாக இணைக்கப்பட்டது)

இலங்கை அரசாங்கத்தின் வங்கிக்காரர்

வாக்களிக்கப்பட்ட மூலதனம்	ரூபா	4, 500, 000, 00
கொடுக்கப்பட்ட வேதனம்	,,	3, 000, 000, 00
சேமநிதி	,,	2, 600, 000, 00

தலைமைக்காரியாலயம்:- பிரிஸ்ரல்வீதி, கொழும்பு.
நியூயோர்க் ஏஜெண்டுகள்:- ஏர்வின் ட்ரஸற் கம்பனி.
லண்டன் ஏஜெண்டுகள்:- பார்க்கிளேஸ வங்கி.
கிளைக்காரியாலயங்கள்:- புறக்கோட்டை, (கொழும்பு) கண்டி, காலி. திருக்கோணமலை, பாணந்துறை, குருநாகலை (பழைய நகரமண்டபம்)
யாழ்ப்பாணத்துக் காரியாலயம்:- 242, ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்.

வாடிக்கைகாரர்களுக்குப் பல விசேஷ வசதிகள் இவ்வங்கி செய்துகொடுக்கின்றது.

நடைமுறைக்கணக்கு:-
இலங்கையில் (திருக்கோணமலையை ஒழிந்த) உள்ள எல்லாப் பிரதான நகரங்களிலும் மாற்றக்கூடிய "செக்"குகள் கொமிஷன் இன்றிப் பெற்றுக்கொள்ளப்படும்.

சேமிப்புப் பணம்:-
ஆகக்கூடிய தொகை ரூபா 10, 000. வட்டி நூற்றுக்கு வருடம் ஒன்றுக்கு 2 விகிதம் கேட்டநேரம் திருப்பிக் கொடுக்கப்படும்.

நிரந்தரச்சேமிப்பு:-
இதற்கான விகிதம் முதலியவற்றைக் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

கடன்களும் மேலதிகமாகக் கடன் பெறுதலும்:-
அங்கீகரிக்கப்பட்ட பிணையின் பேரிற் கொடுக்கப்படும்.

நாணயமாற்று:-
இதற்கான ஏஜெண்டுகள் உலகெங்கும் உண்டு.

பிறநாட்டு விவகாரப் பகுதி:-
ஜீ. ஓ. எச். கட்டிடம், யோர்க் வீதி, கொழும்பு.

இந்தியா, மலாய்நாடுகளுக்கு அனுப்பக்கூடிய உண்டியல், தந்தி, மாற்றுப் பத்திரங்கள் விஷயமாக விசேஷ வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

T. S. முத்துலிங்கசாமி
ஏஜெண்டு,

Std. 29 1-8—30-7-48.

திருச்சி ரேடியோ

சனி நவம்பர் 8

காலை 7 15 கீதாரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 டி எஸ் லோகநாதன் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 கே எம் சசிதாராவ் வயலின் 8 30 காலை இசை இசைத்தட்டு 9 முடிவு

1 கே எம் சசிதாராவ் வயலின் 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 சர்வகலாசாலைகளுக்கு 2 தமிழில் செய்திகள் 2 05 சர்வகலாசாலைகளுக்குகுறிப்பு 2 15 திருப்பூர் வி முத்துலக்ஷ்மி பாட்டு 2 45 முடிவு

மாலை 5 திருப்பூர் வி முத்துலட்சுமி மீனாட்சி பாட்டு 5 40 அற்புத திருவந்தாதி விளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 டி எஸ் லோகநாதன் பாட்டு 7 15 ராணுவத்திலிருந்து திரும்பியவர்களுக்கு வசதிகள் 7 30 தமிழில் செய்தி 7 45 பாருபள்ளி ராகிருஷ்ணய்பர் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 இளவல் நாடகம் 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9 45 எஸ் கே சுமதி பாட்டு 10 இசைவேளை 10 30 முடிவு.

ஞாயிறு நவம்பர் 9

காலை 7 15 கீதாரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7-30 எம் எம் மாரியப்பா பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 அரியக்குடி ராமானுஜஐயங்கார் இசைத்தட்டு 8 30 சடத்தூர் வெங்கடேசய்யர் சங்கராராமய்யர் வீணை 9 முடிவு.

12 கதம்பம் 12-30 சம்பத்தின் வெற்றி நாடகம் 12 45 நவரத்தினவிலாசம் நாட்டியகீதம் 12 50 கோட்டிக்கிழங்கு இசை நிகள்ச்சி 1 மணிமலர் 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 கல்லிடைக்குறிச்சி 2 தமிழில் செய்திகள் 2 05 பெண்ணுலகம் 2 30 நீங்கள் கேட்டவை 3 முடிவு.

மாலை 5 எம் எம் மாயயப்பா பாட்டு 5 40 தேவாராதனை 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 சடத்தூர் வெங்கடேசய்யர் சங்கராராமையர் வீணை 7 30 தமிழில்செய்திகள் 7 45 புத்தக விமர்சனம் 8 கே ஆர் குமாரசாமி பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 குரல்வகை இசைத்தட்டு 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9 45 வியோலா வயலின் 10 இசைவேளை இசைத்தட்டு 10 30 முடிவு

திங்கள் நவம்பர் 10

காலை 7 15 கீதாரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 திருமெய்ஞ்ஞானம் ஜி நாராயணசாமி பிள்ளை நாகஸ்வரம் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 புதிய பாடல்கள் ஆ இரே வித்வான்கள் 8 30 பாலக்காடு எஸ் கிருஷ்ணமூர்த்தி பாட்டு 9 முடிவு

1 கதம்பம் 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 பாலக்காடு எஸ் கிருஷ்ண மூர்த்தி வயலின் 2 தமிழில் செய்திகள் 2 05 பாலக்காடு எஸ் கிருஷ்ணமூர்த்தி பாட்டு 2 15 கல்வி ஒலிபரப்பு 2 45 முடிவு

மாலை 5 திருமெய்ஞ்ஞானம் ஜி நாராயணசாமி பிள்ளை நாகஸ்வரம் 5 40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்ரகானம் இசைத்தட்டு 7 30 தமிழில் செய்திகள் 7 45 உழவர்க்குத்துணை 4 பயிர்கள் 8 தீபாவலி 9 ஆங்கிலத்திற் செய்திகள் 9 15 குரல்வகை இசைத்தட்டு 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9 45 எச் எஸ் மத்வாச்சார் கோட்டு வாத்தியம் 10 இசைவேளை 10 30 முடிவு

செவ்வாய் நவம்பம் 11

காலை 7 15 கீதாரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 லட்சுமி நடராசன் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 திருவிழிமிழலை என் சுப்பிரமணியபிள்ளை சகோதரர்கள் நாகஸ்வரம் பி கோவிந்தராஜபிள்ளை தவில் 9 முடிவு.

12 கதம்பம் இசைத்தட்டு 12 30 தீபாவலி 12 35 அபூர்வன் தீபாவளி மலர் 12 40 மலரின்வெற்றி கவிதைநாடகம் 12 45 தீபாவலிக் கடிதங்கள் 12 55 பூவாணம் ஒலிச்சித்திரம் 1 மணிமலர் 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 பெண்ணுலகம் 2 தமிழில் செய்திகள் 2 05 குரல்வகை இசைத்தட்டு 2 15 கல்வி ஒலிபரப்பு 2 45 முடிவு

மாலை 5 லக்ஷ்மி நடராஜன் பாட்டு 5 40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 சரவெடி கதம்ப நிகழ்ச்சி 7 30 தமிழில் செய்திகள் 7 45 ஆலத்தூர் சகோதரர்கள் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 குரல்வகை இசைத்தட்டு 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9 45 ஜே வி ராகவன் பாட்டு 10 நீங்கள் கேட்டவை இசைத்தட்டு 10 30 முடிவு

புதன் நவம்பர் 12

காலை 7 15 கீதாரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 காளையார் கோயில் எம் எஸ் சண்முகசுந்தரம் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 ரேடியோ வாத்ய கோஷ்டி 8 30 ஜி ஜானகி பாட்டு 9 முடிவு

1 கதம்பம இசைத்தட்டு 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 ஜி ஜானகி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 ஜி ஜானகி பாட்டு 2 15 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு.

மாலை 5 வரகூர் முத்துசாமி ஐயர் வயலின் 5 40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 புதுப்பெண் நாடகம் 7 15 பத்திரிகைப் பரிகிலேனை 7 30 தமிழில் செய்திகள் 7 45 சித்ரகானம் இசைத்தட்டு 8 வரகூர் முத்துசாமி ஐயர் வயலின் 8 30 காளையார் கோவில் எம் எஸ் ஷண்முகசுந்தரம் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 ஆங்கிலப் பேச்சு 9 30 யிண்டனிலிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9 45 ஐரோப்பிய சங்கீதம் இசைத்தட்டு 10 30 முடிவு.

வியாழன் நவம்பர் 13

காலை 7 15 கீதாரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 டி ஆர் விஸவநாத ஐயர் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 8 15 காலைஇசை இசைத்தட்டு 8 30 வி கல்பகம் நாராயணன் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் இசைத்தட்டு 1 0 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 பெண்ணுலகம் 2 தமிழில் செய்திகள் 2 05 குரல்வகை இசைத்தட்டு 2 15 கல்வி ஒலிபரப்பு 2 45 முடிவு

மாலை 5 வி கல்பகம் நாராயணன் பாட்டு 5 40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்பகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்ரகானம் இசைத்தட்டு 7 15 செய்திவிளக்கம் 7 30 தமிழில் செய்திகள் 7 45 பி கே விஸ்வநாத சர்மா வயலின் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 எஸ் ஜீ கிட்டப்பா இசைத்தட்டு 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9 45 மாயவரம் கே ராமசாமி பாட்டு 10 30 முடிவு.

வெள்ளி நவம்பர் 14

காலை 7 15 கீதாரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 டி கே சீதாராமன் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 திருச்சி வாத்யகோஷ்டி 8 30 டி பி ராமமூர்த்தி பர்ட்டு 9 முடிவு

1கதம்பம் இசைத்தட்டு 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 டி கே சீதாராமன் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 டி பி ராமமூர்த்தி பாட்டு 2 15 கல்வி ஒலிபரப்பு 2 45 முடிவு.

மாலை 5 திருச்சேறை ஆர் கிருஷ்ணமூர்த்திபிள்ளை பாட்டு 5 40 குரான் ஷரீப் விளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 திருச்சேறை ஆர் கிருஷ்ணமூர்த்தி பிள்ளை பாட்டு 7 30 தமிழில் செய்திகள் 7 45 மந்திரமா மருந்தா? உலோகங்கள் 8 திருவாவடுதுறை என் ஆர் நடராஜசுந்தரம் பிள்ளை நாகஸ்வரம் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 நாட்டுப்பாடல்கள் 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9 45 குரல்வகை இசைத்தட்டு 10 நீங்கள் கேட்டவை இசைத்தட்டு 10 30 முடிவு

தொண்டர்மகாசபை கைதடி

பிரம்மஸ்ரீ கே. கே. யோகானந்த ஈசுவரக் குருக்கள் அவர்களின் தலைமையில் சமயத்தொண்டு, கல்வித் தொண்டு முதலிய பல சேவைகளைச் செய்யும் நோக்கமாக, 24-10-47 சுக்கிரவாரம் மாலை ஆறரை மணியளவில் முத்துக்குமாரசுவாமி ஆலயத்தில் மேற்சடிசபை ஸ்தாபிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உலகம்பலவிதக் கதை

2 ம் பக்கத் தொடர்ச்சி

யாகிய உன்னிடத்தில், உன் இரதத்தில் ஏறிவருபவர்கள் தங்கள் உடல் பொருள் ஆவி மானம் என்னு மிவைகளை உன்னிடத்திலேயே பிரயாணம் முடியும்வரை, இல்லையேல் உன் இரதத்தைவிட்டு இறங்கும்வரை ஒப்புவித்துவிடுகிறார்கள்; பெருந்தொகையான பணத்தைக்கொண்டு, கருமம் பார்ப்போர் சில சமயங்களிற் சாரதியாகிய உன்போன்றவர்களை நம்பி வேறு துணையின்றி உங்கள் இரதங்களில் ஏறிவருகிறார்கள்; பிராயப்பட்ட பள்ளிக்கூடச்சிறுமிகளை வேறு துணையின்றி உன்னைப் போன்றவர்களை நம்பி இரதத்தில் ஏற்றிப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பிவைக்கிறார்கள்; பள்ளிக்கூடத்திலிருந்தும் தங்கள் குமர்ப்பிள்ளைகளை ஏற்றிக்கொண்டுவரும்படி பெற்றார் பாதுகாப்பாளர் உங்களை நம்பிச் சொல்லுகிறார்கள்: உலகத்திலுள்ள மக்கள் எல்லாவகையிலும் உங்களைநம்பி உங்கள்மீது விசுவாசம் வைத்து நடக்க, "வேலி பயிரைமேயத் தலைப்பட்ட விதமாக" இந்தப் பிள்ளைக்கு வழியில் ஏதும் இடையூறு வந்தாலுங் காக்கவேண்டிய நீ அதற்கு மாறாக, நம்பிக்கைத்துரோகமென்பதைச் சிந்தியாமல், உன் பொறுப்பை மறந்து, இந்தப் பெண் தடுக்கத்தடுக்க, இப் பெண்ணினுடைய விருப்பத்திற்கு மாறாக தீய எண்ணத்தோடு இப்பெண்ணைக் கொண்டுபோயிருக்கிறாய்; இப்பெண்ணுடைய நல்ல காலத்தினாற்போலும், அந்தபொலிஸ் சந்தியில் உன்னைத் தடுக்காதிருந்தால் நீ நினைத்த தீமையை இந்தப் பெண் விஷயத்திலே செய்திருப்பாய்; பெண்ணென்றாற் பேயுமிரங்கு மென்றபடி, எவராயினும் ஒரு பெண்ணுக்கு ஏதும் ஆபத்து நேரக்கண்டால், உடனே அப்பெண்ணை அந்த ஆபத்தினின்று நீக்கத்தான் முயற்சி செய்வார்கள், அப்படிப்பட்டவர்களேஉண்மையான ஆடவர்களாவர். நீ மனுஷவடிவமாகக் காணப்படினும், மனுஷக் குணங்கள் உன்னிடமில்லாமையினாலே, நீ இராக்கதனு யிருத்தல் வேண்டும்; உன்னைச் சிங்கம் புலி முதலிய மிருகங்களுக்கு ஒப்பாகச் சொல்லலாமோ எனின், அந்த மிருகங்கள் தம் இரையை வீரத்தோடு தாக்கிக் கொன்றுதின்னுமேயொழிய உன்னைப்போல், பேடித் தனமாகப் பெண்ணினுடைய மானத்தைப் பங்கப்படுத்த ஒருபோதுந்துணியா; ஆதலால் நீ அந்தத் துஷ்ட மிருகங்களைக் காட்டிலும் பன்மடங்கு துஷ்டனாவாய். இதுமாத்திரமல்லாமல் நீ இன்னுமொரு நம்பிக்கைத் துரோகஞ் செய்திருக்கிறாய் உன் முதலாளியாகவுள்ள மனுஷன் உனக்குத் தக்க சம்பளந் தந்து, உன்னைப் போஷித்துப் பல ஆயிர ரூபாகொண்ட இரதத்தை உன்னிடம் நம்பி ஒப்படைக்க, நீ அவைகளை மறந்து உன்னை நம்பி நடந்த முதலாளிக்கே துரோகஞ் செய்தாய்; இப்படிப்பட்ட நீ ஒருபோதும் சாரதியாக இருக்கவொண்ணாது; நீ இரதமோட்டுஞ் சாரதியாகவிருத்தலினால் மனுஷ வர்க்கத்துக்கு அதிக கெடுதியுண்டாகும்; இந்தக் குற்றங்களின்பேரில் உனகது 6, 6 மாசக் கடுங்காவல் தண்டனை விதிக்கிறேன்; சாரதியென்ற அதிகாரத்திற்குரிய அநுமதிப் பத்திரத்தையும் இன்று தொடக்கம் உனக்கு இல்லாமற்செய்கிறேன்; உன்மேலுள்ள இன்னொரு குற்றம் பொலிஸ் கட்டளையை மீறித் தப்பியோடியது; இதற்கும் மூன்று மாசக் கடுங்காவல் விதிக்கிறேன்" என்று கூறி நீதிபதி அந்தச் சீனனுக்கு 9 மாசக் கடுங்காவல் விதித்தார்.

"பரிதாபமான வரலாறு"

இது நடந்தபின் சிலநாட்செல்ல, இந்த ஐயா பொலிஸ்வேலையிலிருந்து விலகி, அந்தச் சிறிய வீட்டிற்றானே, இருந்தார்; ஐயாவுக்கும் எனக்கும் அந்த இந்தியமனுஷியே சமையல் செய்து தந்துகொண்டு எங்கள் வீட்டிலேயே யிருந்தாள்; இதற்கிடையில் நாங்கள் இருக்கும் இந்தவூரும் யப்பானியர் கைப்பட்டது; எங்கள் ஐயா யப்பானியருடைய கொடுங்கோன்மையிலிருந்து இந்தநாடு சீக்கிரத்தில் விடுதலையடையவேண்டுமென்று தெய்வத்தை அல்லும் பகலும் பூசித்துக் கும்பிட்டு வந்தார்; வழக்கமான உடையை நீக்கிக் காவியுடை உருத்திராக்கமாலை யென்னுமிவைகளை அணிந்துகொண்டு வருவாராயினர்; நாங்கள் வசித்த வீட்டிற்கு அயலிலிருந்தவர்கள் ஆபத்திற்குப் பயந்து வேறு ஒதுக்கிடங்கள்தேடிப் போனார்கள்; ஆனால் எங்கள் ஐயா மாத்திரம் எல்லாவுயிர்களையும் பாதுகாக்கும் ஆண்டவன் எங்களையும் பாதுகாப்பான் என்று எங்களுக்குப் புத்தி சொல்லிக்கொண்டு வேறெங்கும் போகாமலிருந்தார்; அக்கா, யப்பானியர் இந்தநாட்டைப் பற்றியாண்டநேரத்திலே நாங்கள் பட்ட கஷ்டம்பல, ஆனால் அவைகளை இப்போது உங்களிடஞ் சொல்லி உங்களையும் கவலைக்குளாக்க வொண்ணாதென்றுதான் சொல்லாமல் விடுகிறேன்; என் பெற்றாரின்கதி யென்னவாயிற்றோ என்று நினைக்கும்போதெல்லாம் என்னுள்ளம் "குபீர்" என்று பற்றி யெரியும்; நான் கவலை சகிக்கமுடியாமல் அழுவேன்; அப்பொழுது இந்த ஐயா "மகளே, கவலைப்படாதே அவர்களுக்கு எவ்வகையான தீமையும் வரமாட்டா, ஆண்டவன் காப்பார்" என்று தேறுதல் சொல்லுவார்; ஒருநாள் இந்த ஐயா, எங்களையறியாமல், பகைவர் கையில் அகப்படாமல் இரகசியமாகப்போய் என் அருமையான பெற்றார் வசித்த இல்லத்தைப் பார்த்தாராம்; இல்லமிருந்த இடத்தைத்தானும் அவதானிக்கமுடியாமல் அந்தப்பட்டினம் முழுவதும் அழிந்து மயானம்போற் கிடந்தத் தென்பதை அப்பொழுது சொல்லாமல் யப்பானியர் இந்தநாட்டைவிட்டு நீங்கியபிறகே எனக்குச் சொன்னார்; நான் கேட்டுக் கவலைப்பட, அப்பொழுதும் எனக்குத் தேறுதல்தான் சொன்னார்; இப்பொழுதும் தேறுதல்சொல்லி வருகிறார்; யப்பானியர் இந் நாட்டினின்றுந் துரத்தப்பட்ட பின்னர்த்தான், அக்கா, நீங்கள் இப்பொழுது சேர்ந்து படிப்பித்துவரும் பள்ளிக்கூடத்திலே சமயமும் தமிழும் படிப்பிக்கும் உபாத்தியாயராகக் கடமை பார்த்து வருகிறார்; தாம் எப்பொழுதும் இப்படித் துறவியாக விருந்தே காலங் கழிப்பதென்றும் எனக்கு இடையிடையே சொல்லுவார்; இதற்கிடையில், யப்பானியர் இந்நாட்டைவிட்டொழிந்து போகவே, எங்களுக்குச் சமையல் செய்துகொண்டிருந்த இந்திய மனுஷியும் தன் சொந்தவூரை விட்டுப் புறப்பட்டு இந்நாட்டுக்குத்தான் வந்து வெகுகாலமென்றும் தன் உற்றார் உறவினரைத் தான் ஊரிற் போய்ப் பார்க்கவேணுமென்றும் எங்களிடம் விடைபெற்றுக் கொண்டு போய்விட, இப்பொழுது சில மாசங்களாக ஐயாவும நானுமே அங்கு வசித்து வரலானோம்; நானும் ஐயாவுமே சமையல் செய்து உண்டு வருகிறோம்: அயலிலுள்ள ஒரு இந்திய மனுஷன் எங்களுக்கு வந்து ஏதும் உதவிசெய்து தருவது வழக்கம்; இப்பொழுது எங்கள் வீடு அந்த இந்திய மனுஷன் பொறுப்பிலேயே யிருக்கிறது; அக்கா, இதுதான் என்னுடைய பரிதாபமான வரலாறு" என்று சொல்லி முடித்தலும், பரிவுடன் கேட்ட பாக்கியலட்சுமி அவளுக்குத் தேறுதல் கூறி நித்திரை செய்ய விடுத்துத் தானும் படுக்கைக்குப் போனாள்.

"மாதரார் தாமிருந்த இடவகையில் தனிபுகுதோம்"

ஒருநாள் மத்தியானத்தின்மேல் இரண்டுமணியளவிலிருக்கும், சிவகுருநாதன் தன் உத்தியோகம்பார்க்கப் போய்விட்டான், மத்தியான போசனம் முடித்துக்கொண்டு கண்ணகியம்மையும், மகளாகிய சிவபாக்கியமும் நமசிவாயத்தின் விஷயமாக யோசித்துக் கவலைப்பட்டுக்கொண்டு தலைவாசலில் இருக்கும்போது, காடி வீசைமுறுகியசடையோடுகூடிய ஒரு துறவி அங்கே போனார்: அத்துறவியின் வரவைக் கண்டவர்களாகிய தாயும் மகளும் உடனே இருக்கைவிட்டெழுந்து நமஸ்காரம் பண்ணி "சுவாமி வாருங்கள்" என்று உபசாரத்தோடு வரவேற்ப, அந்தச் சந்நியாசியார் "விசுவநாதா, விசாலாட்சி" என்று உச்சரித்துக்கொண்டு தலைவாசலை யடைதலும் அவர்கள் அந்தத் துறவிக்கு ஆசனமிட்டு உபசரித்து இருக்கச்செய்தனர், இருத்தலும் கண்ணகியம்மை அத்துறவியைப் பணிவுடன் பார்த்து "சுவாமீ, மிகவும் ஆயாசத்தோடு காணப்படுகிறீர்கள், தாகத்துக்கு ஏதும் உட்கொள்ளுகிறீர்களா? பாலுண்டு, மோருண்டு கொண்டுவரலாமா" என்று விநயமுடன் கேட்க, அத்துறவி கண்ணகியம்மையைப் பார்த்த "தாயே, இப்போது எனக்கு ஏதும் வேண்டாம், தேவையானாற்கேட்கிறேன்; மேலும், ஆச்சி, நீங்கள் நினைப்பதுபோல நான் ஒரு பெரிய சந்நியாசியல்லேன்: வாழ்நாளில் ஒருமுறையேனும் காசியாத்திரை சென்று கங்கையிற் படிந்து, விசாலாட்சி சமேதவிசுவநாதப் பெருமானைத் தரிசிக்க வேண்டுமென்ற வேணவாவினால் இப்படியான உடையோடு புறப்பட்டேன்; இந்தவீட்டில் இப்போது யாரும் ஆண்பிள்ளைகள் இல்லையா" என வினவ 'இல்லை, சாமீ, என்மகனொருவன இந்தவீட்டிற்குரியவன், இன்னும ஒன்றரை, இரண்டுமணி நேரத்துள் வந்துவிடுவான், அவனுக்கு உங்களைப் போன்ற பெரியவர்களைக்காண, கண்டு உபசரிக்க வெகு ஆசை..." என்று கண்ணகியம்மை சொல்லி முடிப்பதற்கிடையில் "அப்படியானால், அவர் வந்தபின் 5 மணி வரையில் நான் தவறாமல் மீண்டு இங்கே வருவேன்" என்று சொல்லிப் போதற்கு எழுந்தார், இதற்கிடையில் தாயின் பக்கலிலே ஒதுங்கிநின்ற சிவபாக்கியம் அத்துறவியை நமஸ்காரஞ் செய்து 'சுவாமீ, சொல்லுகிறேனென்று குறையெண்ணாதீர்கள், பெண்களாய்ப் பிறந்த நாங்கள் அவ்வளவு அதிக பாவிகளா" என்று மனவருத்தத்தோடுகேட்க, "இல்லை, அம்மா, ஆண்களில்லாத வீட்டிலே வந்திருத்தல், உணவுசெய்தல் பிரமசாரிக்காக, துறவிக்காக, ஆணாய்ப்பிறந்தவரெவருக்கும் முறையல்ல; அதனாற் சொன்னேனே யொழிய உங்கள் மீது வெறுப்புக் கொண்டேனும், நீங்கள் பாவிகளென் றெண்ணியேனுஞ் சொன்னேனல்லேன; நீங்கள் அறியாத விஷயத்தை நான் உங்களுக்குச் சொல்ல வரவில்லை, சிறுத்தொண்ட நாயனார் இல்லத்தில் இல்லாத சமயத்தில் எங்கள் வைரவப்பெருமான் அங்கே சென்று நாயனார் உங்கிருக்கின்றாரோ என்று வினவியபோது, அந்நாயனாருடைய பத்தினியாராகிய வெண்காட்டு நங்கையார் விரைந்து வந்து வரவவடிவங்கொண்ட இறையவரை வணங்கி, சுவாமீ, எங்கள நாயனார் இன்று முழுதும் யாரும் சிவனடியவர் இங்கு வரவில்லையே என்று கவலைகொண்டு சிவனடியாரைத் தேடிப்போய்விட்டார்; சற்றுநேரத்தில் வந்துவிடுவர், சுவாமியை இங்கிருப்பக்கண்டால் ஆநந்தமடைவார்; ஆதலினாற் சற்றுநேரம் இருந்தருள வேண்டும்" என்று இரந்தபோது வைரவமூர்த்தி சொல்லியருளியதென்ன "மாதரார் தாமிருந்த இடவகையில் தனிபுகுதோம்" என அருளிச்செய்து அவ்விடம்விட்டகன்றாரென்று, எங்கள் பெரியபுராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது; அதனாற்றான் சொன்னேன்; அல்லாமலும்நான் சற்றுநேரஞ்செல்ல இங்கு மீண்டுவருவேன்" என்றார். "சுவாமி, உங்கள் விருப்பத்தை எங்களாற் றடுக்கமுடியுமா? ஆனால், அந்த வைரவமூர்த்தி வெண்காட்டு நங்கையாருக்குத் தாம் வசிக்குமூர் உத்தரதேசம் எனச் சொல்லிவிட்டுப் போனாரென்று பெரியபுராணத்திற் சொல்லப்பட்டிருக்கிறதே, அதுபோல, நீங்களும் உங்கள் சொந்தவூர் எது என்று சொல்லவொண்ணாதா? நீங்கள் பிறந்த ஊர் யாழ்ப்பாணமா" என்று விநயத்தோடு கேட்டாள் சிவபாக்கியம்; சந்நியாசியார் புன்னகை செய்து 'படித்தவருக்கும் பரதேசிக்கும் எந்தவூருஞ் சொந்தவூராம்; ஆனால் என் சொந்தவூர் யாழ்ப்பாணந்தான்" என்றார்: 'சுவாமி நாங்களும் யாழ்ப்பாணத்தவர்கள்தா மென்பது எங்கள் பேச்சினால்உங்களுக்குவிளங்கும்; சுவாமீ, நீங்கள்படித்தவராகவும் பரதேசிபோலவுங்காணப்படுகிறீர்கள்; எந்தவூருஞ் சொந்தவூரேயென்றும் சொல்லுகிறீர்கள்; அது நிசம்; ஆனதினால், என் அண்ணர் இன்னுங் கொஞ்ச நேரத்தில் வந்துவிடுவார்; அதுவரையிலும் எந்தவீடும் சொந்தவீடுதான் என்று எண்ணிக்கொண்டு இங்கு இருங்கள்" என வணக்கத்துடன் சொன்னாள் சிவபாக்கியம்; சந்நியாசியார் புன்சிரிப்புடன் கண்ணகியம்மையைப் பார்க்க "சுவாமி, இவள் என்மகள; சிறுபிராயந்தொட்டு இவள் குறும்புக்காரி; ஆனால் உள்ளத்தில் எவ்வகையான அழுக்குமில்லாதவள்; யாழ்ப்பாணத்தவர்களென்றால் இவளுக்குவெகு அபிமானமுண்டு; அதனாற்றான்சாமி இவள் இப்படி உங்களோடு உரிமை பாராட்டி வார்த்தையாடுகிறாள்; குறை நினையாதீர்கள்" என்று பணிவுடன் சொல்ல, ஒரு குறைபுமில்லை ஆச்சி. இந்தப் பிள்ளையின் உள்ளம் பளிங்குபோன்றதென்பது பேச்சால் விளங்குகின்றது; இளம் வயசில் இப்படித்தான் ஆச்சி....." என்று சாமியார் சொல்லி முடிப்பதற்கிடையில், சிவபாக்கியம் அடுக்களைக்குச் சென்று சுத்தமான ஒரு பாத்திரத்திலே பாலும், இன்னொரு பாத்திரத்திலே தண்ணீரும் கொண்டுவந்து அத் துறவியின்முன் வைத்து, "சுவாமி, நல்ல பால் இருக்கிறது; தாகசாந்தி செய்யுங்கள்: அப்படிச் செய்வீர்களானால் எங்கள் மனம் சந்தோஷப்படும்" என்று சொல்லி ஒருபுறத்து ஒதுங்கி விநயமாக நின்றாள்; அந்தச் சந்நியாசியாரும், அக்கேள்வியை மறுக்கவிருப்பமில்லாராய் உடனே யெழுந்து கைகால் அலம்பி விபூதி தரித்துக்கொண்டு வந்திருந்து பாலினையெடுத்து உட்கொண்டு "விசுவநாதா, விசாலாட்சித்தாயே' என்று உச்சரித்துவிட்டுச் சிறிதுநேரம் இருந்தார்; இங்ஙனமாக நமசிவாயமும் தன்உத்தியோகத்தானத்திலிருந்து மீண்டு அங்கே வந்தான வரும்

கடிதர்க்கு விஞ்ஞாபனம்

இப்பத்திரிகைக்குக் கடிதங்களையும் ஏதும் சமாசாரங்களையும் எழுதி யுதவும் அபிமானிகள், சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல் என்ற முறையை இயன்றவரையில் அநுசரித்து, தாளின் ஒருபக்கத்தில் மாத்திரம் தெளிவாக எழுதியனுப்புதல் வேண்டும். அபிமானிகள் எழுதியனுப்பும் கடிதங்களைத் தொகுக்கவும் திருத்தவும் மிகையானவற்றைத் தவிர்க்கவும், தகாதனவெனக் கண்டவற்றை ஒதுக்கவும் பத்திரிகாசிரியர்களுக்கு அதிகாரமுண் டென்பதையும், இப்பத்திரிகையை ஆதரியாதவர்கள் வெளியிடும்படி எழுதியனுப்பும் கடிதங்கள் இடம்பெறுவென்பதையும் அன்பர்கட்குத் தெரிவிக்கின்றோம்.

—பத்திராசிரியர்.

உங்கள் வியாபாரம் விருத்தியுற வேண்டுமா?

*

அப்படியானால்

இந்துசாதனத்தில்

விளம்பரஞ் செய்யுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசந்த லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கை கால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும், இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும்தீர்ந்து, தேகத்துக்குப்பலம், உண்டாக்கும்.

ஒருமுத்தல் விலை ரூபா 25
அரைமுத்தலுக்கு ரூபா 12-50
கால்முத்தல் ரூபா 6-25

விலாசம்:

க. ஆறுமுகம்பிள்ளை

நி. 156, செக்கடித்தெரு கொழும்பு

Std. 1. 26—3—47 to 1—4—48

தந்தரோக சஞ்சீவி
கந்தசாமி வைத்தியர்
சந்தனாதித் தயிலம்

ஒரு கிழமைக்கு வைக்கக்கூடிய ஒரு அவுன்சு தயிலம் விலை ரூ 2

ஒவ்வொருநாளும் ஒருசதவீதம் வைத்துக் கடைசியன்று சீயாக்காய் வெந்தயம் அவித்துத் தப்பி வென்னீரில் தோய்வது. பத்தியம்: புகையிலையாகாது. ஆடினபல்லு உடனே இறகும், முரசுவளரும், வாய்ப் புண் வீக்கம் தொண்டைப்புண் கம்மல் இருமல் கபாலம் பீனிசம் மாற்றும் உத்தரவாதமுடையது. ஒரு தடவை வேண்டிப்பாவித்து அறியலாம்.

நெருப்புச்சூடு முதல் எந்த வேக்காட்டிற்கும் பூச உடனே வேதனை தணியும்.

வி. பி. பீ. யிலும் அனுப்புவோம்.
சீசா முதலிய செலவு வேறு

விலாசம்:

ஆயுர்வேத சிவசோதி
மெடிக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை

Std 25 1-7-46—30.6.48 (வெ)

கிருஷ்ணன் றாது

சருக்கவுரை

வில்லிபாரதம்—உத்தியோக பருவத்துள்ளதாகிய கிருஷ்ணன் றாது சருக்கம், பண்டிதர் ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை எழுதிய பொழிப்புரை சரித்திரத்தொடர்பு, நூலாசிரியர்வரலாறு என்னுமிவற்றுடன் யாழ்ப்பாணம் நாவலர் கலாசாலைத் தலைமையாசிரியர் வித்துவான் ந சுப்பையபிள்ளை யவர்கள் எழுதிய விசேடக் குறிப்புரையுஞ் சேர்த்து ஐந்தாம் பதிப்பாக அச்சிட்டு வெளிவந்துளது; இச்சருக்கத்திற்சிலபாகம் இப்பொழுதுதமிழ் ஆங்கில எஸ். எஸ். ஸீ பரீட்சைக்குப் பாடமாக விதிக்கப்பட்டுள்ளன

விலை 1 ரூபா 75 சதம் (ரூபா 1 அறு 12)

மனேஜர், சைவப்பிரகாச யந்திரசாலை
வண்ணார்பண்ணை :: யாழ்ப்பாணம்

20—10—47.

கொழும்பு—சிங்கப்பூர் கப்பல் பிரயாணம்

மாதம் ஒருமுறை ஒழுங்காகச் செல்லும் கப்பலில் பிரயாணச்சீட்டு எம்மூலம் பெற்றுக்கொள்ளலாம். பிரத்தியேக வண்டியில் யாழ்ப்பாணமிருந்து பிரயாணம், கொழும்பில் தங்கும் வசதி யாவும் குறைந்த செலவில் ஏற்பாடு செய்யப்படும்.

நாகபட்டணம் பினங் பிரயாணிகளின் கட்டணம் 130 ரூபாவாகக் குறைக்கப்பட்டிருக்கிறது.

விபரம்:

எஸ். ஆர். எஸ். நாதன்,
21/3, ஸ்ரான்லி ரோட் யாழ்ப்பாணம்
[வின்சர்-வெலிங்டன் படகாவிகைகளின் மத்தியில்]

Std 23. 6-6-47—6-6-48

மலேயாவுக்கு நாகபட்டணம் மார்க்கமாக

கப்பல் சீட்டு

[மாசமிருமுறை கப்பல்கள் போகின்றன]

யாழ்ப்பாணமிருந்து றெயில்வே ரிக்கற், சாப்பாடு, லக்கேஜ்சார்ஜ் இருப்பிடச்செலவு எல்லாம் உட்பட நாகபட்டனமிருந்து பினங் செல்ல டெக் ரிக்கற் ரூபாய் 130 க்கு எங்கள் மூலமாக பெற்றுக் கொள்ளலாம்

வேறு செலவு உங்களுக்கு இல்லை

பல நூற்றுக்கணக்கானோர் எங்கள் மூலமாகப் பிரயாணஞ்செய்து திருப்தியடைந்து கொடுத்த நற்சாட்சிகள் அநேகம் உண்டு.

வடஇலங்கையில் இவ்வகையில் முதல்ஸ்தானம் வகிக்கிறோம்

எங்களிடம் மற்ற விபரங்களை நேரிலோ லெட்டர் மூலமோ தெரிந்துகொள்ளலாம்.

ஸ்ரீ கதிர்வேல் அன்கோ,
252, காங்கேசன்துறைரோட்
சிவன்கோவிலடி,
யாழ்ப்பாணம்.

தந்தி (Srivel)
பிராஞ்சு: நாகபட்டணம்.

3 2—9—47&28 2 48

கஷ்டத்திற் பட்டகவி

1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிறது. பூர்த்தியானதுதான் தாமதம் ஆடத்தொடங்கிற்று. கம்பருக்கொரே மலைப்பு. சுவரும் வளைந்துகொண்டு வருகிறது. வைபவத்தில் கலந்து கொண்டவர்கள் கொல்லென்று நகைத்தார்கள்.

கம்பர் சுவர்க்கு நேரே நீட்டி பொறு! பொறு!! என்று ஏதோ சொன்னார். பின்னுந் தொடர்ந்து பலவாறாகச் சிந்தித்தார். சிலவார்த்தைகளை யடுக்காய்க் கூறினார். சுவர் நிமிர்ந்து அசையாமல் நின்றது. சனங்கள் திகைத்துவிட்டனர். கம்பர் சுவர்விழும் சமயம் கஷ்டப்பட்டுச்சொன்ன வார்த்தைகள்தான் இப்பாட்டு.

"மற்கொண்ட திண்புயத்தான்
மாநகர் விட்டிங்கு வந்தேன்
சொற்கொண்டபாவின்
சுவையறிவா ரீங்கிலையே
விற்கொண்ட வாணுதலாள்
வேலிதருங் கூலி
நெற்கொண்டு போமளவும்
நில்லாய் நெடுஞ்சுவரே"

[மல்+கொண்ட=மற்கொண்ட - மல்யுத்தத்தைப் புரிந்த, திண்புயம்- வலியபுயம். வில்+கொண்ட — விற்கொண்ட—வில்போன்ற, வாள்+நுதல்=வாணுதல்—ஒளிபொருந்திய நெற்றி, நில்லாய்-நிற்க. நெடுஞ்சுவர்- உயரமான சுவர். திண்டியத்தான் - இங்கு சோழன்]

காணிவிற்பனவு விளம்பரம்

பூநகரி மட்டுவில்நாடு "நாவலடி" என்னுமிடத்தில் 238 பரப்பு சிறந்த வயல் நிலம் விலைக்கிருக்கின்றது. புதுச் தெருவிற்குச் சமீபத்திலுள்ளது; விபரமறிய விரும்புவோர் என்னிடம் நேரிலேனும் கடிதமூலமாகவேனும் அறிந்து கொள்ளலாம்.

அ. நடராசா
104, அத்தியடி ரோட்
யாழ்ப்பாணம்

M 170 4, 7

ஆலயமும் பூசை திருவிழாக்களும்

முதலாம் பக்கத் தொடர்ச்சி

ரும் "ஆலயந் தொழுவது சாலவும் நன்று" என்று கூறியருளினர். கோயிலில்லாவூரிற்குடியிருக்கவேண்டாம் என்னும் பழமொழியும் இதையே வலியுறுத்துகின்றது.

இக்காலத்திற் பணம் படைத்தகிலர், முன்னரே தம்மூரவர் வழிபாட்டிற்குத் தக்க கோயில் இருந்து, அதன் நித்திய நைமித்திகங்களுக்குக் குறைவு ஏற்படக் காணினும் தாமும் ஓர் 'ஆலய ஸ்தாபகர்' என்னும் இடம்பப் பெயர் பெறும்பொருட்டுப் புது ஆலயங்கள் கட்டுகின்றனர். இங்ஙனம்கட்டுவித்தகோயில்களிற்பல அதை தாபித்தவர்இருக்கும்பொழுதேமங்கி மறைவதும், பிற்காலத்துத் தேய்ந் தொழிவதும் கண்கூடு ஒன்றைவைத்துக் கிரமமாக நடத்தமுடியாத ஊரவர்கள் பலவற்றை ஆதரிப்பார்களா? இதனால் இவர்கள் "உள்ளதையுங் கெடுத்தான் நொள்ளைக் கண்ணன்" என்பதுபோல முன்னுள்ள கோயிலுக்கும் முட்டுண்டாக்கி விடுகின்றனர். ஒரு ஊர் பலவாற்றானுஞ் சிறப்படையவேண்டின், அவ்வூர்த் திருக்கோயிற் பூசை, திருவிழாக்கள், ஆகம விதி வழுவாது நடைபெற வேண்டும். அதற்கு, மூலதனமும் பகதர்கள் அபிமானமும், சிறந்த நிர்வாகமும் அமைதல் அவசியம். ஒரு கோயிலில் எழுந்திருக்கும்கடவுளின் திருவருட் பிரகாசம் ஆலய அர்ச்சகர், அத்தியட்சகர், வழிபடுவோர் ஆகிய முத்திறத்தவர்களும் ஒத்து ழைத்துத் தம் கடமைகளைச் சரிவரச் செய்வதையே பொறுத்திருக்கிறது. சற்சமயமாகிய நம் சைவசமயம் மற்றெச் சமயத்தைக் காட்டிலும் அநுட்டான வகையில் மிகவும் பிற்போக்கடைந்துவிட்டது. இதனை மீளவும் சீர்திருத்தவேண்டியது அறிஞர் கடன். அதற்கு முதற்படியாக ஊர்கடோறுமுள்ள ஆலய நிர்வாகங்களைச் செப்பஞ் செய்வார்களாக, எம்பெருமான் இதனைக் கூட்டிவைக்கும்படி இன்னருள்புரிவாராக.

உங்கள் சங்கீதக் கருவிகள் பழுதடைந்துவிட்டனவா?



அப்படியானால் உடனே எம்மிடம் கொண்டுவாருங்கள்
3 வருட உத்தரவாதத்துடன் புத்தம்புதிதாய்
பழுதுபார்த்துத் தருகிறோம்

[எவ்வித நிலைமையில் உள்ளதாயினும் சரி கட்டணம் வேகு சகாயம்]

கல்சற்றுமோகன்புளூட் ஹார்மோனியக் கம்பெனி,
சிவலிங்கப்புளியடி, 484, K. K. S. ரோட், யாழ்ப்பாணம்.

Std 34 12—9—47 To 9—12—47. (F)

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai Jaffna, on Friday, November 7, 1947.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org